# திருக்குறள் வினா விடை



தமிழ்க்காவலர்
திரு. வே. இறைபிள்ளை

வெளியீடு
கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் வினா விடை

தொகுப்பாசிரியர்
தமிழ்க்காவலர்
**வே. இறைபிள்ளை**

**வெளியீடு**
கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : திருக்குறள் வினாவிடை
முதல் வெளியீடு : கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்
தி.ஆ..2047 (2016)
தொ.பே-0213200285
பதிப்பு : சிவா பதிப்பகம்
தாள் அளவு : 148மி.மீ x 210மி.மீ
தாள் வகை : 70 கிராம்
படிகள் : 1000
கிடைக்குமிடம் : சிவா பதிப்பகம்,
05, கனகபுரம்,
கிளிநொச்சி
தொ.பே.0212285534

விலை : 90/-

## இந்நூலுக்குத் துணை நின்றவை

01. திருவள்ளுவர் (அ) வாழ்க்கைவிளக்கம்
02. நண்பர்க்கு
03. தம்பிக்கு
04. தங்கைக்கு
(01–04: முனைவர் மு. வரதராசன்)
05. வள்ளுவரும் குறளும்
திருக்குறள்கட்டுரைகள் (05–06: முத்தமிழ்க் காவலர்கி. ஆ. பெ. விசுவாசகம்)
07. இலக்கிய வெளிச்சம் தொகுதி - 2 : முனைவர் பொற்கோ (பொன். கோதண்டராமன்)
08. திருவள்ளுவர் : பேராசிரியர் ச. சோமசுந்தரபாரதியார்
09. திருக்குறள் வாழ்வியல் உரை : செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார்
10. வள்ளலார் காட்டும் வாழ்வியல் : வள்ளலார் தாசன்
11. குன்றக்குடி அடிகளார் :நூல் வரிசை தொகுதி 08, சமயஇலக்கியம்
12. திருக்குறள் சிறப்புரை : க. ப. அறவாணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உரை

தமிழ் உலக முதன்மொழி; செவ்விய மொழிகளின் பட்டியலில் தலைமை தாங்கும் மொழி. தமிழருக்கு முகவரியைத் தந்த திருக்குறள் உலகப் பொதுமறை. திருக்குறள் பற்றிய செய்திகளைக் கேட்பதிலும், குறிப்பெடுத்துக் கொள்வதிலும் ஒரு வகை ஈடுபாடு கொண்டிருந்தேன். பெற்ற அருங்குறிப்புக்களை நிரம்பத் திரட்டிக் கொண்டே வந்த நிலையில் இவற்றையெல்லாம் ஓரளவேனும் பொதிய வைத்து நூல் வடிவில் தமிழ்ப் பெருமக்களுக்கு வழங்கினால் தமிழன்னைக்கு எளியேன் புரிந்த தொண்டாக அமையும் எனக்கருதி வினாவிடை என்னும் சிறிய சுவடியை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

நான் படித்து சுவைத்து மகிழ்ந்த-எனது வாழ்க்கையை பண்படுத்திய செய்திகளே இந்நூலில் அடங்கியுள்ளன. திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். நாம் முழுமனிதர்களாக தோன்றவிரும்பினால் திருக்குறளைப் படிக்க வேண்டும். உடனே எடுத்துப் படிக்க வேண்டும். அது உலகத்தின் அறிவுக் களஞ்சியங்களில் ஒன்று.

இந்நூல் செம்மையாக வெளிவர ஆக்கமும் ஊக்கமும் அளித்த சங்க உறுப்பினர்களுக்கும், மெய்மைப் படியுடன் ஒப்பு நோக்கிப் பிழைகளைத் திருத்திய திருவாட்டி அ.இரஞ்சிதமலர், திருவாட்டி ச.மணிமேகலை அவர்களுக்கும், சுவடியை எழிலுறப் பதிப்பித்துள்ள சிவாபதிப்பக உரிமையாளர் திரு.இ.சிவாதரன் அவர்களுக்கும் இச்சுவடி வெளிவர நிதிஅளித்து உதவிய வட்டுக்கோட்டை கலைநகரைச் சேர்ந்த உறவினர் சட்டவாளர் திரு.வே.த.மு.கதிர்காமநாதன் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

**-வே. இறைபிள்ளை-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுரை

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்க வெளியீடான "திருக்குறள் வினாவிடை" நூலுக்கு வெளியீட்டுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். திருக்குறள் வினாவிடை என்ற அரியதொரு நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார் திரு.வே.இறைபிள்ளை அவர்கள். இவர் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் நிறுவுனரும் வாழ்நாள் தலைவரும் ஆவார். இவர் திருக்குறளை வாழ்வியலின் எல்லாக் கூறுகளிலும் பயன்படுத்துபவர். திருக்குறளைப் பல்லாண்டு படித்து புதிய பல ஆய்வுகளையும் வாசித்து இந்நூலை ஆக்கியுள்ளார். திருக்குறள் பற்றிய புதிய தகவல் பலவும் உள்ளன. கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமல்ல கற்றறிந்த சான்றோர்களுக்கும் உதவ வல்லது. இந்நூல் நீண்டகாலம் திருக்குறளைப் படிப்பவர்களுக்கும் பயன்படக்கூடியது. யாவரும் படித்துப் பயன் பல பெற வாய்ப்பு உண்டு. திருக்குறளை மேலும் மேலும் வளம்பெற இத்தகைய முயற்சி தொடரட்டும்.

**"வாழ்க தமிழ் வாழ்க நற்தமிழர்"**

செ.சிவகுருநாதன்
பொதுச்செயலாளர்

நா.சோதிநாதன்
தலைவர்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியுறை



**அன்பு மகள் அபிராமி விமலதாசன்**
**அவர்களின்**
**இனிய நினைவுக்கு இந்நூல்**
**அடியுறை**

**விமலதாசன் சந்திராதேவி இணையர்**

**மாவிட்டபுரம் கட்டுவன்**

**(இலண்டன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. குறள் ஏன் "மறை" எனப்பட்டது?**

வேண்டா நெறி புகா வகையில் பாதுகாக்கும் நூல் என்பதால் மறை எனப்பட்டது.

**02. திருக்குறள் ஏன் "தமிழ் மறை" என்றும் "உலகப் பொதுமறை" என்றும் கூறப்பட்டது?**

மறை என்றால் பாதுகாப்பு. மெய்ம்மறை என்பது உடலை - மார்பை மறைத்து பகையிடமிருந்து காக்கும் காவல். வெயில்மறை என்பது குடை, வளி மறை இல்லம். தமிழ்நெறியைப் பாதுகாக்கும் நூல் என்பதால் "**தமிழ்மறை**" எனப்பட்டது. உலகப் பொதுமை கருதுவதாக இருப்பதால் "**உலகப்பொதுமறை**" எனப்பட்டது.

**03. சான்றோன் என்ற ஒரே சொல்லில் எத்துணை பொருட் சிறப்பை வைக்கிறார் திருவள்ளுவர்.**

**மனிதனாய் பிறந்தவன் மகாத்துமாவும் ஆகலாம் துராத்துமாவும் ஆகலாம். மகாத்துமாவாகும் பொழுது உலகம் அவனைச் சான்றோன் என வழங்குகிறது. பல நற்குணங்களாலும் நிறைந்த அவற்றை ஆளும் தன்மையே சான்றாண்மை எனப்படும். அப் பல நற்குணங்கள் யாவை?**

அன்புடைமை, பழிபாவங்களுக்கு நாணுதல், பிறரிடத்துப் பரிவுகாட்டல் (கண்ணோட்டம்) வாய்மை ஒப்புரவு என ஐந்தும் சால்புடைமை என்னும் மாளிகையைத் தாங்கும் தூண்களாம்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்" (குறள் 983)

**04. திருக்குறளில் வரும் "இனம்" "இருமை" அவை எவை?**

ஒன்று மேன்மைக் குணம் அமைந்த மேலினம்
மற்றது கீழ்மைக் குணம் அமைந்த கீழினம்.

**05. திருக்குறளின் வேறுபெயர்கள் எவை?**

பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, தெய்வநூல், உத்தரவேதம், முப்பால்நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. திருவள்ளுவரைக் குறிக்கும் பிற பெயர்கள் எவை?**

செந்நாப்புலவர், செந்நாப்போதர், திருத்தகு தெய்வத் திருவள்ளுவர், தெய்வப் புலமைத்திருவள்ளுவர், தெய்வப் புலவர், மாதானுபங்கியார், முதற்பாவலர், வள்ளுவ தேவர், நாயனார், புலவர், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர், பொய்யில் புலவர்.

**07. திருவள்ளுவர் காட்டிய உலகளாவிய பெருநெறிகள் எவை?**

சான்றோர்க்கும் எந்நாடும் நம்நாடே, எவ்வூரும் நம் ஊரே. அறிவறிந்த நன் மக்கட்பேறு தம் பெற்றோருக்கும் இப்பேருலகுக்கும் பெருநலம் செய்யும்.

**08. திருக்குறள் வாய்ப்பறை அறைய எழுந்த நூல் அன்று. மேற்கோள் காட்டி மேடைக் கலைப் பொருளாக்க எழுந்த நூல் அன்று படிப்பாளன் எண்ணிப் படங்காட்டிக் கொள்ள எழுந்த நூல் அன்று எனில் எதைப்படைக்க எழுந்த நூல்?**

அறம் சார்ந்த குமுகாயத்தைப் படைக்கவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டவும் எழுந்த வாழ்க்கை விளக்கம்.

**09. திருவள்ளுவர் ஆண்டைத் தொடக்கி வைத்தவர் யார்? எப்போது?**

தமிழ்க்கடல், தனித்தமிழ்த் தந்தை, மறைமலை அடிகள் கி.பி 1936, சுறவ(தை)த் திங்கள் 5ஆம் நாள் 18.01.1936 திருவள்ளூர் திருநாள் கழகத்தினர் நடத்திய திருவிழாவில்.

**10. திருவள்ளுவர் ஆண்டை எவ்வாறு கணிப்பிடுவது?**

கிறித்துவ ஆண்டுடன் 31 ஆண்டைக் கூட்ட வேண்டும்.
எ.கா: 2016+31=2047

**11. வள்ளுவர் வள்ளுவத்தின் பயனை இவ்வாழ்க்கையின் இறுதிக் குறளில் வைத்துள்ளார். அது எந்தக் குறள்?**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்." (குறள் - 50)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. அன்பிலார் தம் நலமே பேணுவர். அன்புடையார் பிறர் நலம் பேணுவர். என்ற கருத்தைக் கூறும் குறள் எது?**

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் - 72)

**13. கண்ணோட்டம் என்பது இரக்கம். பிறர்படும் துயரம் கண்டு இரங்கும் கண்களே கண்கள் இரக்கமற்றவர் முகத்தில் உள்ளவை கண்களல்ல. புண்கள் என்று சுட்டுரைக்கும் குறள் எது?**

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்
புண்ணென்று உணரப் படும்" (குறள் - 575)

**14. மகனொருவன் தனக்கு பல வகையாலும் உதவிய தன் தந்தைக்குச் செய்யும் கைமாறு என்ன?**

இவனைப் பெற்ற தந்தை என்ன தவம் செய்தானோ என்று மற்றவர் பாராட்டும் படியாக வாழ்வதே மகன் தந்தைக்கு செய்யும் நன்றிக் கடனாகும்.

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன்தந்தை
என்நோற்றன் கொல்எனும் சொல் " (குறள்-70)

**15. திருக்குறள் வாழ்வியல் நூலா? அறநெறி நூலா?**

திருக்குறள் அறம் தழுவிய வாழ்வியல் நூல்

**16. திருக்குறளால் தோன்றிய நூலகம் எது?**

"சரசுவதி மால்" எனும் கலைக் கருவூலம்

**17. பாரதியார் திருவள்ளுவரை போற்றிப் புகழ்ந்த பா எது?**

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

**18. "ஒளி வாழ்வு வேண்டின் ஒரு குறளையேனும் தெளிவாழ்ந்து செய்தல் திறம்" எனக் கூறியவர் யார்?**

மூதறிஞர் வ.சு.ப.மாணிக்கனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. திருக்குறளைப் பற்றி ஔவையார் கூறிய புகழ் வார்த்தை எது?**

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப்
புகட்டிக் குறுகத் தறித்த குறள்"

**20. இன்னா செய்யாமை கொள்கையை உருவாக்க நோபல் பரிசு பெற்ற உருசியக் கவிஞர் "தால்சுதோய" அவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த திருக்குறள் பாக்கள் எந்த அதிகாரத்தில் உள்ளது?**

இன்னா செய்யாமை அதிகாரம் (32)

**21. திருக்குறளை இயற்றியவர் யார்?**

திருவள்ளுவர்

**22. நட்பு கொள்ளுதலின் நோக்கமும் கூடிச்சிரித்து மகிழ்வதற்கு அன்று தவறு காணும் போது ஒருவருக்கு ஒருவர் இடித்துக் காட்டித் திருத்திக் கொள்ளும் பொருட்டேயாகும் என கூறும் குறல் எது?**

'நகுதற் பொருட்டுஅன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு' (குறள்784)

**23. எந்த நாட்டில் அணுத்துளையாத சுரங்கப் பாதுகாப்பு பெட்டகத்தில் அருமையான நூல்களுள் ஒன்றாக திருக்குறள் நூல் வைக்கப்பட்டுள்ளது?**

உருசிய நாட்டு கிரெம்ளின் மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது.

**24. தம் மறைநூல் பைபிளைப் போல் திருக்குறளையும் காலையில் கண் விழித்ததும் கற்கும் நூலாக போற்றி வைத்திருந்த, பேரரசியார் யார்?**

விக்ரோறியாப் பேரரசியார்

**25. குறளாய நிறுவுனர் - அமைப்பாளர் நெறியாளர் யார்?**

ஈரோடு வேலா அரச மாணிக்கனார்.

**26. உலகத் தமிழ்மறைக் கழகத்தை நிறுவியவர் யார்?**

மூதறிஞர் கா.பொ.இரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27. எந்த நாட்டின் தொடர் வண்டிகளில் திருக்குறள் எழுதப்பட்டுள்ளது? அது எந்தநாடு? எந்தமொழி?**

பிரான்சு , பிரன்சு மொழி

**28. குறள்"திருக்குறள்" என வழங்கப்பட்டது ஏன்?**

வெண்பா வகையுள் ஒன்று குறள் வெண்பா அது குறு வெண்பாப் பாட்டு என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படும். அதன் சிறப்புக் கருதி திருக்குறள் என வழங்கப்பட்டது.

**29. திருக்குறளுக்கு"முப்பால்" எனும் பெயர் ஏற்பட்டது ஏன்?**

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள்களையும் தனித்தனி பகுப்பாக்கி கொண்டமையால் முப்பால் என்னும் பெயர் ஏற்பட்டது.

**30. ஒருவர் அல்லது ஓரமைப்புச் செய்ய வேண்டிய குறளாயப் பணிகள் எவை?**

1) திருக்குறளைப் பரப்புதல்
2) குறளாய முறையில் குடும்பக் கரணங்கள் (சடங்குகள்) எல்லாமும் நிகழ்த்துதல்.
3) திருக்குறள் குமுகாயம் முன்னேற்றம் அடைய அடிப்படைச் செயல்களைப் புரிதல்.
4) வள்ளுவர் வழியில் மொழி இனக் காப்புக் கடமைகளில் பங்களிப்புச் செய்தல்.

**31. திருவள்ளுவர் பல்வகை இயல்களில் திறமான புலமை பெற்றவர் அவற்றுள் சில இயல்களைக் குறிப்பிடுக?**

உலகியல், உயிரியல், உணர்வியல், உடலியல், குடியியல், படையியல், பொருளியல், தொழிலியல், அரசியல்

**32. "தமிழர் வகுப்பு வேற்றுமை பாராட்டுவதில்லை" என்று கூறுவர் இதை விளக்கும் குறள் எது?**

"பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்புஒவ்வா,
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள் 972)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33.** **“நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆர்வமேயாம்” என்று கூறியவர் யார்?**

இந்திய நாட்டின் தேசியத் தந்தை காந்தியடிகள்

**34.** **“திருக்குறளை நன்றாய் கற்பவர்களுக்கு வேறு கல்வி வேண்டியதில்லை என்பது என் துணிவு” என்றும் “பேரறிஞர் மெக்காலே பிரபுவின் புத்தாக்கக் களஞ்சியம் முழுவதையும் விட இவ்வியப்பிற்குரியநூல் ஒன்று மட்டும் சாலச் சிறந்தது” என்றும் கூறியவர் யார்?**

எம்.எச்ச்.மைக்கேல்

**35.** **“திருக்குறள் வழங்கும் செவ்விய இன்பம் இத்தகையது என்று எந்த மொழிபெயர்ப்பாலும் ஒரு சிறிதாயினும் கொடுக்க இயலாது. திருக்குறள் உண்மையாகவே வெள்ளியால் செய்யப் பெற்ற எழில் பேழையில் இட்டு வைக்கப் பெற்ற பொன் அப்பிள் பழம் போன்றதாகும்” எனக் கூறியவர் யார்?**

முனைவர் கிரெளல்

**36.** **“திருக்குறளை ஓதி உணர்ந்தால் அன்றி எவனும் தமிழ் அறிந்தவன் என்று கூறிக்கொள்ள முடியாது”எனக் கூறியவர் யார்?**

பிரடெறிக் பின்காட்

**37.** **வேல் எடுத்துப் போர் செய்யும் வீரனை “அயில் உழவன்” என்றும் வாட்போர் புரியும் வீரனை “வாளுழவன்” என்றும் சிந்தாமணி குறிப்பிடுகிறது. வில்லெடுத்துப் போர் செய்பவனையும், சொல்லெடுத்துப் போர் செய்யும் வீரனையும் திருவள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?**

வில்லேருழவர், சொல்லேருழவர்

“வில்ஏர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்ஏர் உழவர் பகை” (குறள் 872 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**38. அமர்க்களத்திலும் அறநெறியைக் கடைப்பிடித்தலே வீரத்திற்கு அழகு என்பது திருவள்ளுவர் கொள்கை. இதைக் குறிப்பிடும் குறள் எது?**

"பேர்ஆண்மை என்ப, தறுகண், ஒன்றுஉற்றக்கால்
ஊராண்மை மற்றுஅதன் எ∴கு" (குறள் (773)

**39. "வேளாண்மையோடு சான்றாண்மையும் செல்வச் செழுமையும் உடையதே நாடு" என்று வள்ளுவர் கூறும் குறள் எது?**

"தள்ளா விளையுளும் தக்காரும், தாழ்வுஇலாச்
செல்வரும், சேர்வது நாடு" - (குறள் 731)

**40. நம் நாட்டில் பெண்குழந்தைகள் மணலில் விளையாடி வீடுகட்டுவார்கள். ஆண் குழந்தைகள் அம்மணல் வீடுகளை அழிப்பார்கள். இது தொன்று தொட்டு வரும் பழக்கம். மணலில் விளையாடி விட்டு, அப்படியே வீட்டிற்கு வந்து புழுதிபட்ட கையுடன் தன் தந்தை (அ) தாய் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சோற்றை ஒரு குழந்தை அள்ளுகிறதாம். தன் குழந்தையின் கையென்ற காரணத்தால் அச்சோறு அசுத்தப்படுவதாக கருதாமல் அத்தந்தையுள்ளம் (அ) தாயுள்ளம் அச்சோற்றை அமிழ்தை விடச்சிறந்ததாக கருதுகின்றதாம். இத்தகைய அன்பு நிறைந்த உள்ளத்தை சுட்டும் குறள் எது?**

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (குறள் 64)

**41. செல்வத்தை தேய்க்கும் படை எது?**

'அல்லற்பட்டு, ஆற்றாது, அழுதகண் நீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் 555 )

**42. இல்வாழ்வான் என்பான் யார் யாருக்குத் துணையாக இருக்க வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார்?**

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (குறள் 42)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**43. வள்ளுவர் அதிகாரம் ஒன்றிற்கு "வாழ்க்கைத் துணை நலம்" எனப் பெயர் வைத்தது ஏன்?**

வாழ்க்கையில் அவனுக்கு அவள் துணையும், அவளுக்கு அவன் துணையும் ஆதல் வேண்டும் என்பதாகும்.

**44. பரிமேலழகர் உரையை மறுத்து எழுதிய உரையாசிரியர் யாவர்?**

நாவலர் இரா.நெடுஞ்செழியன், புலவர் குழந்தை, செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமரனார். முனைவர்சு.ப.அறவாணர்

**45. திருக்குறள் ஓதினால் பெறும் பயன் என்ன?**

திருக்குறளை ஓதினால் உயர்வு கிட்டும், பண்பாடு தானே வரும், நோய் நொடி நீங்கும்; உயிர் தளிர்த்து நீடுவாழலாம்; தெய்வநிலை எய்தலாம்.

**46. அறம் என்பது அள்ளிக் கொடுப்பதும் அன்று அருந்தொண்டும் அன்று எனில் எது அறம் என வள்ளுவர் கூறுகிறார்?**

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அறம்.

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற" (குறள்: 34)

**47. திருவள்ளுவரை தெய்வப் புலவர் என அழைப்பது ஏன்?**

திருவள்ளுவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை எய்தியமையால்.

**48. "வ" ஒரு இடத்திலும் "வா" நான்கு இடத்திலும் வரும் குறள் எது?**

"வசையொழிய வாழ்வாரே வாழ்வர் இசையொழிய
வாழ்வாரே வாழாதவர்" (குறள் 240)

**49. தவத்திற்குரிய பண்பைக் கூறும் குறள் எது?**

"உற்ற நோய் நோன்றல்,உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு" (குறள் 261)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50. கொடுமையான குணமுள்ள சிலரை கொலைத் தண்டனையால் அரசன் தண்டித்தல் பயிரைக் காப்பாற்ற களையைக் களைவதற்கு ஒப்பான செயல் 'எனக் கூறும் குறள் எது?**

"கொலையின், கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" (குறள் 550)

**51. மெய் எழுத்து "வி" நான்கு இடத்தில் வரும் குறள் எது?**

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு" (குறள் 299)

**52. உயிர் மெய் "செ" எனும் எழுத்து ஆறு இடத்தில் வரும் குறள் எது?**

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" (குறள் 411 )

**53. இல்லத்திற்கு அடைக்கும் தாழ் உண்டு. நாம் வழிபடச் செல்லும் ஆலயத்திலும் அடைக்கும் தாழ் உண்டு. ஆனால் எதற்கு அடைக்கும் தாழ் இல்லை?**

அன்புக்கு

"அன்பிற்கும் உண்டோ, அடைக்கும்தாழ்? ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்" (குறள் 71)

**54. இவ்வுலகம், அவ்வுலகம் யார் யாருக்கு இல்லை?**

"அருள்இல்லார்க்கு அவ்உலகம் இல்லை, பொருள்இல்லார்க்கு
இவ்உலகம் இல்லாகி யாங்கு" (குறள் 247)

**55. பெரியவர் யார்? சிறியவர் யார்?**

"செயற்குஅரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்" (குறள் 26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**56. திருக்குறளின் பிறமொழிபெயர்ப்புக்களின் கூடுதலான மொழபெயர்ப்புக்கள் எந்த மொழிகளில் உள்ளன.**

| | **மொழிபெயர்ப்பு எண்ணிக்கை** |
|---|---|
| 1. ஆங்கிலம் | 50 (1840) |
| 2. மலையாளம் | 13 |
| 3. தெலுங்கு | 11 |
| 4. பிரெஞ்சு | 09 (1767) |
| 5. இந்தி | 09 |
| 6. குயராத்தி | 09 |

**57. கனி இருக்க காய் கவர்தல் எதற்கு உவமையாகக் கூறப்பட்டது?**
இனிய உளவாக இன்னாத கூறல் (குறள் 100)

**58. ஒருவர் கோபப்படாமல் வாழ்ந்து வந்தால் நினைத்த நேரம் நினைத்தவாறு பல நன்மைகளை தொடர்ந்து பெறுவார் என்பதனை சுட்டும் குறள் எது?**
"உள்ளிய எல்லாம் உடன்எய்தும், உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (குறள் 309)

**59. சோம்பலாக இருந்து வெற்றுப் பேச்சுப் பேசி காலம் கடத்தும் ஒருவனிடத்து 'மூதேவி' வாழ்வாள். சோம்பல் இல்லாதவனுடைய வீட்டிலே திருமகள் வாழ்வாள்' என்பதை விளக்கும் குறள்?**
"மடி உளாள் மாமுகடி என்ப; மடிஇலான்
தாள்உளாள், தாமரையி னாள்" (குறள் 617)
(மடி-சோம்பல்)

**60. துணை நலம் ஆக்கம் தரும் வினை நலம்... எதைத் தரும்?**
வேண்டிய எல்லாம் தரும் (குறள் 651)

**61. இளம் பெண்ணின் பார்வையை எவ்வாறு உவமிக்கிறார் வள்ளுவர்?**
"கூற்றமோ? கண்ணோ? பிணையோ? -மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து" (குறள் 1085)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**62. திருவள்ளுவராண்டு யாரால் எப்போது உறுதி செய்யப்பெற்றது?**
நாவலர் சோமசுந்தரப் பாரதி முதலிய தமிழ் அறிஞர்களால்.
1921 ஆம் ஆண்டு

**63. உலக மொழிகளில் மொழி பெயர்த்துள்ள நூல்களில் திருக்குறள் எத்தனையாம் இடத்தைப் பெற்றுள்ளது?**
3ஆம் இடம்
இலக்கிய நூல்களில் முதலாம் இடம்

**64. தமிழில் மிக அதிகமான பதிப்புக்களைப் பெற்ற நூல் எது?**
முனைவர் மு.வரதராசன் அவர்களின் திருக்குறள் தெளிவுரை 216 பதிப்புக்கள்

**65. திருக்குறளை முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?**
யி.யு.போப்

**66. திருக்குறளில் ஒரே தலைப்பில் உள்ள அதிகாரங்கள் எவை?**
குறிப்பறிதல் - பொருட்பால், குறிப்பறிதல் - இன்பத்துப்பால்

**67. திருக்குறளை பின்வரும் மொழிகளில் மொழி பெயர்த்தவர்கள் யாவர்?**

| | | |
|---|---|---|
| இலத்தீன் | Latin | - முனைவர் வீரமா முனிவர் |
| பிரெஞ்சு | French | - ஏரியல் (Ariel) 1942, Gnanoo Diagou |
| செர்மன் | German | - கிரால் (Th.Kari Graul) 1854 |
| ஆங்கிலம் | English | - யி.யு.போப் (G.u.pope) |
| பியி | Fiji | - சாமுவேல் பார்விக் (Samvel L.Berwick) 1964 |
| சிங்களம் | Singala | - செல்வி. மிசிகாமி (Miss.Misigamy) 1961 சில்வாசாள்சு |
| தெலுங்கு | Telugu | - சொக்கம் நரசிம்ம கலு நாயுடு (Sokkam Narasimhalu Naidu) 1892 |
| பர்மா | Burmese | - யு.மைஓ.தான்ட் (U.Myo.Thant)1964 |
| உருது | Urdu | - ஹச்ராட் சுபார்வாடி (Hasrat suharwardy)1965 |
| மலையாளம் | Malayalam | -வி.கோபாலகுறுப் (V.Gopalakurp)1957 |
| உருசியா | Russian | -இல்சொவ் (Ilsov)1964 |
| இந்தி | Hindu | - கிச்மணைட்ர்காற் (Kshmanandarahat)1924 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**68. வாய்மையுள்ள குடிமக்கள் என யாரை வகைப்படுத்தலாம்?**

முகமலர்ச்சி (நகை), ஈகைக்குணம், இனிய சொல், பிறரை இகழாத பண்பாடு (இகழாமை) ஆகிய நான்கும் உள்ள குடிமக்களை.

"நகை, ஈகை, இன்சொல், இகழாமை, நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு" (குறள் 953)

**69. யாருடைய? உடலுக்கு மருந்து தேவையில்லை**

உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து உணவுஅருந்துவார்களாயின் அவர்களின் உடலுக்கு மருந்து தேவையில்லை

"மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" (குறள் 942)

**70. நீரின்றி அமையாதது எது?**

உலகு

"நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள் 20)

**71. புறத்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை எதனால் காணப்படும்?**

வாய்மையால்

"புறம்தூய்மை நீரான் அமையும், அகம்தூய்மை
வாய்மையான் காணப் படும்" (குறள் 298)

**72. இங்கர்சால் என்னும் பகுத்தறிவாளரின் உள்ளத்தை பெரிதும் கவர்ந்தகுறட்பாக்கள் எவை?**

அறிவு அற்றம் காக்கும் கருவி (குறள் 321)
எப்பொருள் எத்தன்மையாயினும் (குறள் 453)
எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்(குறள் 424)

**73. செருமானிய அறிஞர் பாலகிரால் எந்தக் குறளின் பொருள் ஆழத்திலும் கலை அழகிலும் ஈடுபட்டுத் திருக்குறளை முழுமையாகக் கற்று செருமன் மொழியிலும் இலத்தீன் மொழியிலும் திருக்குறளை மொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர்த்தார்?**

"இருநோக்கு இவள்உண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்கு; ஒன்று அந்நோய் மருந்து" (குறள் 1091)

**74. இவ்வுலகம் யாருக்கு உரிமை உடைத்து?**

தத்தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருப்பவர்களுக்கு

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் உலகு" (குறள் 578)

**75. திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாக எவை இருக்க வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயை பெருக்கி அதைப் பாதுகாத்து திட்டமிட்டுச் செலவிடுவது தான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணம்

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும், வல்லது அரசு." (குறள் 385)

**76. வாழ்க்கைத் துணைக்கு மூன்று கடமைகளைக் கூறுகிறார் வள்ளுவர் அவை எவை?**

1.தற்காத்தல் 2.தற்கொண்டான் பேணல் 3. தகை சார்ந்த சொற்காத்தல்

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண்" (குறள் 56)

**77. இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு எவை தேவை?**

அன்பான உள்ளமும் அதையொட்டிய மாசுஇல்லாத நல்ல செயல்களும் தேவை

"அன்பும் அறனும் உடைத்துஆயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள் 45)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**78. வீட்டில் இருந்து பொருள்களைப் பெருக்கி வாழ்க்கை நடத்துவது எதன் பொருட்டு?**

விருந்தினர்களைப் பேணி உதவி செய்யவதற்கு

"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி,
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் 81)

**79. எதைக் காத்திட முடியாவிட்டாலும் எதை அடக்கிக் காத்திட வேண்டும்**

நாவை (நாகாக்க)

"யாகாவார் ஆயினும், நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர், சொல்இழுக்குப் பட்டு" (குறள் 127)

**80. உள்ளாறும் புண் எது? ஆறாத புண் எது?**

சுட்ட புண் உள்ளாறும் நாவினால் சுட்டவடு ஆறாது

"தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு" (குறள் 129)

**81. வாழ்வுக்கு பொருள் தேவை பொருளற்ற வாழ்வு வாழ்வாகாது எவராலும் பொருட்படுத்த முடியாத ஒருவர் எல்லோராலும் பொருட்படுத்த வேண்டுமானால் அவர் பொருளைப் பெற்றிருக்க வேண்டும் இக் கருத்தை வெளிப்படுத்தும் குறள் எது?**

"அருள்இல்லார்க்கு அவ்உலகம் இல்லை, பொருள்இல்லார்க்கு
இவ்உலகம் இல்லாகி யாங்கு" (குறள் 247)

**82. எந்தச் செல்வத்தையும் உண்டு பண்ணும் ஆற்றல் அறிவுச் செல்வத்திற்கே உண்டு. பிற செல்வங்களுக்கு இந்த ஆற்றல் இல்லை. செல்வங்கள் அனைத்துமோ, சில செல்வங்கள் மட்டுமோ, அல்ல தனித்து ஒரு செல்வமோ அறிவற்ற மக்களிடத்தில் நில்லாது என்பது வள்ளுவர் கருத்து இதை எடுத்துக் கூறும் குறளைக் குறிப்பிடுக?**

"அறிவுஉடையார் எல்லாம் உடையார்; அறிவுஇலார்
என்உடைய ரேனும் இலர்" (குறள் 430)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**83. யார் வாழ்வர்? யார் வாழாதவர்?**

"வசைஒழிய வாழ்வாரே வாழ்வார், இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்" (குறள் 240 )

(வசை பழி, இசை - புகழ்)

**84. குறள்காட்டும் கடவுள் எது. அக்கடவுளின் ஆயுதம் எது?**

குறள் காட்டும் கடவுள் அன்பு. அறக் கடவுள் ஆகும். பகைவர் நாடு நகரங்களைத் தீயாலும் அக்கினியாச் சிரங்களாலும் அழிக்கும் கடவுள் அல்ல. குறளாசிரியர் காட்டும் கடவுளின் கையில் போர்த் தளபாடங்கள் இரா, பகைமை, கோபம், விருப்பு வெறுப்பு அற்றவரே குறள் காட்டும் கடவுள். அக்கடவுளுக்கு பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை. அன்பே அக்கடவுளின் ஆயுதம்.

**85. இல்லறம் துறவறம் பற்றிய குறளின் புதைபொருள் எது?**

தவமும் வாழ்வும் இணைந்து செயல்பட முடியுமென்பதே குறளின் புதைபொருள். இல்லறம் வேறு துறவறம் வேறு ஆனால் அவை ஒன்றுக்கொன்று பகை என்று கருதுவது புல்லறிவாண்மை தவம் வேறு வாழ்வு வேறு ஆனால் அவை இரண்டும் கீரியும் பாம்பும் அல்ல

86. எந்த வாழ்க்கையிலும் சிறு சிறு பூசல்வரலாம் போகலாம் அவைகளுக்கு நிலையான இடம் தரக் கூடாது. சிறு பூசல் காரணமாக கணவனும் மனைவியும் பேசாமல் சில மணி நேரம் இருக்கலாம். ஆனால் அடுத்தபடி அன்போடு பேசும் வாய்ப்பை எதிர்பார்த்திருக்க வேண்டும். வலியச் சென்று பேசுவதற்கு நல்லமனம் தூண்ட வேண்டும் அவ்வாறு வலியப் பேசி விட்டுக் கொடுத்தவர் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் என்கிறார் வள்ளுவர். அந்தக் குறள் எது?

"ஊடலின் தோற்றவர் வென்றார், அதுமன்னும்
கூடலில் காணப் படும்" (குறள் 1327)

இக்குறள் உயர்ந்த பண்பாட்டின் அடிப்படையாக பிறந்திருக்கிறது.

**87. சிறிய குற்றத்தை பெரிய குறையாக்கிக் காட்டும் பெரிய குற்றத்தையும் சிறியதாக்கி மறக்கச் செய்யும் பண்பாடு இல்லாவிடின் அத்தகைய அறிவால் பயன் என்ன என்பதைக் குறிக்கும் குறள் எது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்,
மக்கட்பண்பு இல்லா தவர்" (குறள் 997)

**88. நண்பர்களைப் போல் நடித்துச் சிரித்துப் பேசும் துரோகிகளை விட நேருக்கு நேர் எதிரியாக இருக்கும் பகைவர் பத்து மடங்கு மேலானவர் என்பதனை உணர்த்தும் குறள்?**

"நகைவகையார் ஆகிய நட்பின், பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்" (குறள் 817)

**89. முதன் முதலில் ஓலைச்சுவடிகளிலிருந்து ஒப்பு நோக்கி ஓர் எழுத்தும் விடாமல் திருக்குறளை அச்சியற்றி நமக்கு அளித்தவர் யாவர்?**

1. முதற் பேராசிரியர் திருத்தணிகை விசாகப்பெருமாளையர்
2. யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர்

**90. தாயானவள் மகனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சியை பெறுவது எப்போது?**

ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச் சான்றோன் என ஊரார் அழைக்கும் போது மகிழ்வாள்.

"ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள் 69)

**91. அன்பிலார் யாருக்கு உரியர்? அன்புடையார் யாருக்கு உரியர்?**

"அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புஉடையார்
என்பும் உரியர், பிறர்க்கு" (குறள் 72)

**92. பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும் ஒருவர் எதைச் செய்யக்கூடாது.**

சான்றோர் பழிப்பதற்கு காரணமான இழிவுற்ற செயல்களை செய்யக்கூடாது

"ஈன்றாள் பசிஎகாண்பாண் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (குறள் 656)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**93. கண்ணாடி தனக்கு எதிரில் உள்ளதைக் காட்டும் ஒருவரது மனதில் உள்ளதை எது காட்டும்?**

முகம்

"அடுத்தது காட்டும் பளிங்குபோல, நெஞ்சம்
கடுத்தது காட்டும், முகம்" (குறள் 706)

**94. யாரை? மதிக்காமல் நடந்து கொண்டால் பெருந்துன்பத்தை அடைய நேரிடும். பெரியாரை**

"பெரியாரைப் பேணாது ஒழுகின், பெரியாரால்
பேரா இடும்பை தரும்" (குறள் 892)

**95. உலகத்தைப் படைத்தவனாகச் சொல்லப்படுபவனும் (இறைவனை) கெட்டொழிந்து திரியட்டும் என்று வள்ளுவர்குறிப்பிட்டது ஏன்?**

பிச்சை எடுத்துத் தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலையிருந்தால் உலகியற்றியான் கெட்டொழிந்து தொலையட்டும் என்று குறிப்பிட்டார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக, உலகுஇயற்றி யான்" (குறள் 1062)

**96. நெடுங்காலம் நல்ல பெயருடன் அரசில் (அ)நிறுவனத்தில் இருக்க விரும்புகின்றவர் குற்றவாளி அஞ்சும் படியாக உரத்துப் பேசியும் (ஓங்கி அடிப்பது போலக்) கடிது ஓச்சியும் குற்றவாளி மனத்திலும் இவ்வாறு தவறு செய்தல் கூடாது எனும் எண்ணம் தோன்றி ஒழுகும் படியாகவும் தண்டனையை மிகக் கடுமை இல்லாது வழங்குதல் வேண்டும் என்பது வள்ளுவம் அக்குறளைக் குறிப்பிடுக?**

"கடிதுஓச்சி, மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர் (குறள் 562)

**97. ஒருவர் எதனால் எய்துவர் மேன்மை? எதனால் எய்துவர் எய்தாப்பழி?**

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர், எய்தாப் பழி" (குறள் 137)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**98. இழுக்கு என்ற சொல் திருக்குறளில் எத்தனை இடங்களில் வருகிறது?**
18 இடங்களில்

தவறு என்று பொருளில் - 05 குறள்கள் (127, 164, 467, 716, 893)
குற்றம் என்ற பொருளில் - 06 குறள்கள் (136, 137, 35, 48, 385,346)
வழுக்கல் என்ற பொருளில் - 03 குறள்கள் (384, 415,963)
பிழை என்ற பொருளில் - 02 குறள்கள் (138, 808)
இன்னாமை என்ற பொருளில்- 01 குறள் (411)
மறுப்பு என்ற பொருளில் - 01 குறள் (535)

**99. "நல்ல நூல் கற்கக் கற்க மேன்மேலும் இனிமை தருவது போல் பண்புடையவரின் தொடர்பு பழகப் பழக மேன்மேலும் இன்பம்தரும்" என்கிறார் வள்ளுவர். அந்தக் குறள் எது?**
"நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்,
பண்புடை யாளர் தொடர்பு" (குறள் 783)

**100. குற்றம் வருவதற்கு முன்பே காத்துக் கொள்ள வேண்டும் தவறினால் அழிவது உறுதி. அழியும் போது தீயை அடுத்து நின்ற வைக்கோல் போல் அழிய நேரும் இதை எடுத்துக் கூறும் குறள் எது?**
"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக், கெடும்" (குறள் 435)

**101. நல்ல உறவினர்கள் (அ) பணியாளர்கள் நம்மைச் சுற்றியிருக்க என்ன செய்ய வேண்டும்?**
இனிய சொற்களை எப்பொழுதும் பேசவேண்டும்
முடிந்த போது உதவி செய்யவேண்டும்,
இந்த இரண்டையும் செய்யக் கூடியவர்களுக்கு நல்ல சுற்றம் இருக்கும்.

"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின், அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்" (குறள் 525)

**102. திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என திருவள்ளுவர் பிறந்தநாளை காச்மீர் முதல் கன்னியாகுமரி வரை எல்லா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடங்களிலும் கொண்டாடப்பட வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு பள்ளிப் பாடத்திட்டத்தில் திருக்குறளை சேர்க்க வேண்டும் என்று திருக்குறளைப் புகழ்ந்து பேசியவர் யார்?**

பா.கு.க.நாடாளுமன்ற உறுப்பினர் தருண்

**103. ஒருவரை வீழ்த்துபவை எவை என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

1) காலம் தாழ்த்துதல் 2) மறத்தல் 3) சோம்பல் 4) பெருந்தூக்கம் ஆகிய நான்கும் கெடுகின்ற இயல்பு படைத்தவர்கள் விரும்பிப் பெறும் மரக்கலமாகும்

"நெடுநீர், மறவி, மடி, துயில் நான்கும்
கெடும்நீரார் காமக் கலன்" (குறள் 605)

**104. சோம்பல் உடையவரால் வரும் கேடுகள் எவை?**

1. சோம்பல் உடையவர் பகைவர்க்கு எளிதாக அடிமைப்படுவர்.
2. தாம்பிறந்த குடியின் பெருமையை அழிப்பர்.
3. மற்றவர் இகழ்ந்துரைக்கும் ஆளாவர். குறள்(601, 604, 607)

**105. உடம்பு மட்டும் கவரும் கவர்ச்சி பெண்களைச் சிறைகாக்கும் காவலுக்கு உட்படுத்தப்படுகின்றது! அடிமை விலங்காக நின்று அவர்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்துகின்றது. பெண்ணுள்ளத்தின் கவர்ச்சியே பெண்களுக்கு உரிமை வழங்குகின்றது. நிறை காக்கும் காவலை மேற்கொண்டு தலை நிமிர்ந்து வாழும் வாழ்வை நல்குகின்றது. இதை திருவள்ளுவர் அன்றே உணர்ந்து அறிவுறுத்தி உள்ளார். இக்கருத்தைக் குறிப்பிடும் குறள் எது?**

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (குறள் 57)

**106. வள்ளுவத்தில் "கொடுங்கோன்மை"என்ற அதிகாரம் தோன்றியது ஏன்?**

முடியாட்சிக் காலத்தில் முறைகெடல் அரசு இருந்தது அத்தகைய அரசை அழித்தலை துணிந்து கூறுவது வள்ளுவம். அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசை அழிக்கும் மக்கள் வலிமையை மறைப்பின்றி வெளிப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**107. ஒரு திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத்தின் தலைவர் கீழதிகாரிகளையும் பணியாளர்களையும் வசப்படுத்தி ஆளத் தெரியாமல் திண்டாடுகிறார். எவ்வாறு வசப்படுத்தி ஆளவேண்டும் என சுட்டும் குறள் எது?**

"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்" (குறள் 525)

**108. " ஒரு பிரிவினர்க்கே உரிய கோட்பாடுகளை கொள்ளாது விலக்கி உலக மக்கள் அனைவருக்கும் ஒருங்கே பொருந்தும் உண்மைகளையே தேர்ந்தெடுத்து திருவள்ளுவர் மொழிந்துள்ளார். இவ்விரிந்த உணர்வால் மற்றை மனு முதலிய நூல்களில் கூறப்பெறும் கண் மூடித்தனம் எதுவும் இன்றி நூல் மேலோங்கித் திகழ்கின்றது" எனக்கூறியவர் யார்?**

அறிஞர் தூறு

**109. மனிதன் மனிதனுக்கு காட்டுகின்ற அன்பின் மூலம் இறைவனை அடையலாம் என்ற நினைப்பே பகவத் கீதையில் இல்லை. அன்பு நெறியில் மக்கள் தொண்டே சிறந்து விளங்க வேண்டும் என கூறுகிறது குறள் என்று கூறியவர் யார்?**

செருமன் தத்துவஞானி அல்பிறட் சுவைட்சர்.

**110. திருக்குறள் நூலின் சிறப்பு என்ன?**

திருக்குறள் தமிழில் தோன்றிய நூல் தமிழனுக்கு முகவரியைத் தந்த நூல். தமிழ்நெறியில் தோய்ந்து முழுதுற ஆய்ந்த பேராசிரியப் பெருமகனால் செய்யப்பட்ட நூல். நூலோ தொகுத்தவற்றையெல்லாம் கொண்டு மெய்ப்பொருள் இவையெனக் காட்டிய நூல். வாழ்ந்து காட்டிய பெருமகனாரால் வாழ்வார்க்கு வழிகாட்டியாய் வகுக்கப்பட்ட நூல். தமிழ்நெறிக்குப் பாதுகாப்பாக என்றும் எங்கும் பயன்படும் வகையில் உலகப் பெருநோக்கில் எழுதப்பட்ட நூல்.

**111. வாழ்க்கையில் தவறுகள் வருவதற்கு காரணம் என்ன?**

செருக்கு - மனத்திமிர் (கர்வம்)
சினம் - கோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் - காம உணர்ச்சி (சிறுமை)

"செருக்கும், சினமும், சிறுமையும், இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து" (குறள் 431)

தவறுகள் செய்யாமல் இருந்தால் வாழ்க்கை முன்னேற்றம் மேலானதாக இருக்கும்.

**112. கோபம், காமம் இவற்றால் வரக்கூடிய தவறுகளை எப்படி தவிர்க்கலாம்?**

காமம், கோபம், ஆசை இந்த மூன்றும் பெயரளவில் கூட நம்மனதில் இல்லாமல் போய்விட்டால் அவைகளினால் வரக்கூடியவை இல்லாமல் போய்விடும்.

"காமம், வெகுளி, மயக்கம் இவைமூன்றன்
நாமம்கெடக் கெடும் நோய்" (குறள் 360)

**113. திருக்குறளின் பயன்கள் எவை?**

மாந்தனை மாந்தனாக்குவது திருக்குறள்
மாந்தனை சான்றோன் ஆக்குவது திருக்குறள்
மாந்தனை தெய்வமாக்குவது திருக்குறள்
மாந்தனைக் பெயராக் கடவும் பெருநிலை ஒன்றச் செய்வது திருக்குறள்.

**114. திருவள்ளுவரை ஏன் சீருறச் செய்த சிறந்த செவ்வியர் என்கிறோம்?**

பொருளீட்டி இன்பம் துய்த்து அறிவறிந்த நன் மக்களைப் பெற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, குடும்பக் கடமையையும் சீருற்று செய்தமையால் **சிறந்த செவ்வியர்** என்கிறோம்.

**115. அந்தணர் என்பது இந்நாள் கொள்ளும் குலப்பெயர் அன்று அருள் ஒழுக்கத்தால் எவரும் அடையத்தக்க பண்பியற் பெயர் இதனைச் சுட்டும் குறள் எது ?**

"அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்உயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள் 30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**116. செய்ய வேண்டிய நல்ல செயல்களை செய்யாமல் இருப்பது தவறா?**

தவறுதான் உடனடியாக செய்ய வேண்டிய செயல்களை செய்து விட வேண்டும். கஞ்சத்தனமாக சேர்த்து வைப்பது கூட தவறு. அப்படி சேர்த்த பணமும் வீணாக இருந்து அழிந்துதான் போகும்.

"செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பாலது அன்றிக் கெடும்" (குறள் 437)

**117. ஒரு நேர்முகத்தேர்வில் எவற்றைக் கவனிக்க வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

தெரிவிற்குரிய தகுதி

1. நல்ல குடிப்பிறப்பு
2. குற்றம் எதுவும் இழைக்காமை (குறள் 502)
3. பழிக்காத நாணம்
4. அன்பு, அறிவு, தெரிவில் உறுதி பேராசை இன்மை (குறள் 513)
5. ஒருவரிடம் குணங்கள் மிகுதியா, குற்றங்கள் மிகுதியா என்பதை அறிந்து தெரிவு செய்தல் (குறள் 504-511)
6. உறவை முன்னிறுத்தித் தெரிவு செய்தல் துன்பம் தரும் (குறள் 507)
7. நன்கு பலமுறை விசாரித்த பின் தெரிவு செய்தல் நல்லது. அவ்வாறு செய்யாமையும் செய்தபின் ஐயுறுவதும் இடர்களைத் தரும் (510)

**118. தலைமைப் பொறுப்பில் உள்ளவரிடம் இருக்கக்கூடாத தவறுகள் என்னென்ன?**

1. தேவைப்படுபவர்களுக்கு நியாயமானதை செய்யாமல் இருப்பது.
2. எதிரே நிற்பவர் பெரியவர் என்று தெரிந்தும் தன்னுடைய பதவிப் பெருமையை நினைத்து மதியாமல் இருப்பது.
3. கெட்ட வழிகளில் மகிழ்ச்சி அடைவது.

"இவறலும்,மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம், இறைக்கு" (குறள் 432)

**119. முற்பகல், பிற்பகல் எனும் சொல் வழக்கத்தை திருவள்ளுவர் முதன்முதல் தமிழிலக்கியத்தில் பயன்படுத்தி உள்ளார் இதற்கு சான்றான குறள் எது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்" (குறள் 319)

120. மிக மிகப் பழைய காலத்தில் ஒரு ஆடவர் பல மகளிரைக்கூடலும் (கண்ணன்) ஒருமகள் பல ஆடவரைக்கூடலும் (திரௌபதி) நிகழ்ந்து வந்தன. நாளடைவில் அம்முறைகள் அருகின. முன்னதை வீழ்த்த திருவள்ளுவர் எந்தப்பாலில் புரட்சி செய்தார்?
காமத்துப்பாலில் (தமிழ்த்தென்றல் வி.க)

121. தமிழ்நெறியில் கட்டளைக் கல்லாகத் திகழும் காமத்துப்பால் காம சூத்திர வழிப்பட்டதன்று என்பது மெய்மையாம் என்று கூறியவர் யார்?
செந்தமிழ் அந்தணர் புலவர் இரா.இளங்குமரன் (இவர் 3500க்கு மேற்பட்டகுறளாய திருமணங்களை செய்து வைத்துள்ளார்)

122. இன்பத்துப்பாலை அனைவரும் குற்றமற்ற முறையில் படித்து இன்புறுமாறு எழுதப்பட்டிருத்தல் பாராட்டத்தக்கது என்று கூறியவர் யார்?
யி.யு.போப் ஐயர்

123. "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன் குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மநுவாதி ஒரு குலத்துக்கொரு - நீதி" என்று மநுவாதியை கடிந்து வள்ளுவரை புகழ்ந்து பாடியவர் யார்?
மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை

124. "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்" என்று புகழ்ந்து பாடியவர் யார்?
இடைக்காடர்

125. திருக்குறளை தேசிய நூலாக்க வேண்டும் என முதன் முதல் கோரிக்கை விடுத்தவர் யார்?
தமிழ் மாமுனி- தவத்திரு குன்றக்குடி அடிகளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**126. இறப்பைப் பற்றி தெளிவாகக் கூறும் குறள் எது?**

"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" (குறள் 339)

**127. "கேட்டிலிருந்து நன்மையை ஆக்கிக் கொள்வதும் சாவிலிருந்து நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வதும்மாகிய வித்தகம் மிக எளிய கலை மற்றவர்க்கு அது மிகவும் அரிது என்பதை எடுத்துக் கூறும் குறள் எது?**

"நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது" (குறள் 235)

**128. குறளில் குறிப்பிட்டவாறு பின்வரும் சொற்களுக்கான எதிர்கருத்துள்ள சொற்களைத் தருக?**

ஒழுக்கம் - இழுக்கம்
அவ்வுலகம் - இவ்வுலகம்
வசை - இசை
தக்கார் - தகவிலர்
அறிவுடையார் - அறிவிலார்
புகழ் - இகழ்
வாய்மை - பொய்ம்மை
நல்லவை - அல்லவை
பெரியர் - சிறியர்
அன்பிலார் - அன்புடையார்
புறத்தூய்மை - அகம்தூய்மை
பெருமை - சிறுமை
துன்பம் - இன்பம்

**129. 133 அடி வள்ளுவர் சிலை எங்கு உள்ளது?**

கன்னியாகுமரி (தமிழ் நாடு)

**130. துன்பம் வருங்கால் மனங்கலங்காது தெய்வத்தை பழித்துத் தூற்றலாகாது. மலர்ந்த முகத்தோடு துன்பத்தை எதிர்த்தல் வேண்டும். சிரித்து அதன் கொடுமையை சிதைத்தல் வேண்டும். என்பது வள்ளுவம். அந்தக் குறள் எது?**

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃஒப்பது இல்" (குறள் 621 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**131. பண்டை அற்றைத் தமிழர் காலத்தில் திருக்குறள் முடக்கி வைக்கப்பட்டது. ஏன்?**

இன்றைய தமிழ்மக்கள் அயல்மொழியான ஆங்கிலத்தில் கொண்டுள்ள பற்றுப்போல் அன்றைய காலத் தமிழர்களும் அயல்மொழியான ஆரியத்தில் பற்றுக் கொண்டனர். இறைவன் முன்னும் அம்மொழி ஓதுதலே உயர்வுநெறி என்னும் ஏமாற்றுரைக்கு இடம் தந்தனர். இன்று இவற்றை ஒழிக்க முடியாத கெடுநிலைக்கு முற்றாக இடம் தந்து விட்டனர். அவர்கள் கூறிய" தேவமொழி" "பூதேவர்" என்னும் புனை மயக்கத்தில் புவியாள்வோர் (அரசர்) மயங்கினர். தம்மை மறந்தனர். தமிழ் நெறி மறந்தனர். (மனுநெறி) மண்நெறி எனக் கொண்டனர். வள்ளுவம் மூலையில் வைக்கப்பட்டது. முடக்கப்பட்டது. மூச்சுப் போகாமல் காக்க மட்டுமே புலமையாளர்களால் முடிந்தது.

**132. திருக்குறள் எப்போது முதன் முதலில் பதிப்பித்து வெளியிடப்பட்டது?**

1812

**133. தெரிந்து செயல் வகை, தெரிந்து விளையாடல் என்பவற்றின் பொருள் என்ன?**

| | | |
|---|---|---|
| தெரிந்து செயல்வகை | - | ஆராய்ந்து செயலாற்றும் வகை |
| தெரிந்து தெளிதல் | - | தக்காரை ஆராய்ந்து அலுவலில் அமர்த்துதல் |
| தெரிந்து விளையாடல் | - | அலுவல் செய்வாரை ஆராய்ந்து ஆளும் தன்மை |

**134. இல்லாள் பண்பு நலன்களே கணவன் நிமிர்ந்து நடக்கும் பெருமித நடையை மாறுபட்டார், இடத்தும் கூட உண்டாக்கும் என்பதன் குறள் யாது?**

'புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை" (குறள் 59)

**135. வள்ளுவர் ஏன் ஒழுக்கத்தை உயிரினும் அதிகமாக ஓம்பு எனக் குறிப்பிட்டார்?**

ஒழுக்கம் எல்லாவற்றையும் விட மேலானதாக கருதப்பெறுவது தமிழரின் நாகரிகத்துக்கு ஆணிவேர் இக்குறள் பிறநாட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தை விடுவதா? உயிரை விடுவதா என்றநிலை வரும்போது உயிரை விட மனமில்லாது ஒழுக்கத்தையே விடமுற்படலாம். ஆனால் தமிழர்கள் அப்படியல்ல வட துருவம் தென்துருவமாக மாறுபட்டாலும் ஒழுக்கத்தை மட்டும் விட்டுவிடமாட்டார்கள்.

எனவே "உயிரைக்கொடுத்தேனும் ஒழுக்கத்தை காப்பாற்று" என்பது தமிழ் நாகரிகம். ஆகவே வள்ளுவர் உள்ளம்

"ஒழுக்கத்தை உயிரினும் அதிகமாக ஓம்பு" என்று கூறுகிறது அக்குறள்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 131)

**186. ஒரு குறளில் இரண்டு யார் யார் இருக்கின்றன. அதில் அக்குறளை படிக்கும்போது யார், யார் வாய்க்கேட்பினும் என்று பிரித்துச்சொல்பவன் எவனாக இருந்தாலும் கேட்பவன் பேசப்படும் பொருளை தராசில் வைத்து நிறுத்துப் பார்ப்பது போல் பார்ப்பது உண்மையான பொருளைக்கண்டு சொல்வது அறிவு என்று கூறுகின்றார் திருவள்ளுவர் அக்குறளை எழுதுக?**

"எப்பொருள் யார்?யார்?வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள் 423)

**187. மது அருந்தலின் கேடுகள் எவை என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.**

1. உள்ளூர் மக்கள் மது குடித்து மயங்கிக்கிடப்பனை இகழ்வர் (927)
2. கள்ளினும் காமம் இனிது. (1201)
3. காதலி மதுவை விடச் சிறந்தவள். (1090)
4. சான்றோரால் புறக்கணிக்கப்படுவர் .(922)
5. பெற்ற தாயே வெறுப்பாள். (923)
6. மது அருந்துவோர் குமுகாய மதிப்பை இழப்பர். பகைவரும் அஞ்சார். (921)
7. மது குடித்தலும் நஞ்சு குடித்தலும் ஒன்றே. (மெல்ல நஞ்சாதல்) (926)
8. வெட்கம், மானம், நாணம், போய் விடும். (924)

**188. இன்றைய மாணவர்கள் ஆராயாமல் நட்புக் கொள்கிறார்கள் இதைவிடக் கேடானது வேறொன்றும் இல்லை நட்புக்கொண்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறகு மெய்மை நட்பு உடையவருக்கு நட்பிலிருந்து விடுதலை இல்லை என்று திருவள்ளுவர் நட்புக்கு கூறிய இலக்கணம் ஒருவன் ஒருத்தி என்ற காதல் வாழ்வின் விதி காதலர்களுக்கு இயல்பாகியுள்ளது. நண்பர்களுக்கும் இயல்பாகியுள்ளது. இதைச்சுட்டும் குறள் எது?**

"நாடாது நட்டலின் கேடுஇல்லை, நட்டபின்,
வீடுஇல்லை, நட்புஆள் பவர்க்கு" (குறள் 791)

**139. வள்ளுவரின் தனிப்பொது நெஞ்சம் யாது?**

செயல் செயல் செயல், சொல்வது செயலுக்கு வரவேண்டும் செயலுக்கு வருமாறு சொல்ல வேண்டும் என்னும் ஓர் அடிப்படைக் கருத்தினை தன் நெஞ்சில் நீள் இருத்திக் கொண்டே குறள் எழுதியவர், செயல் அடிப்படையை யாண்டும் மறவா உள்ளத்தினர் அப்பெருமகன். ஆதலால் செயலே வள்ளுவம் என்று செய்க.

**140. அறிவியல் என்றால் என்ன? அதன் இலக்கணம் யாது? என்ற வினாக்களுக்கு விடை விரல் நுனியில் உள்ளது போல் திருக்குறளில் உள்ளது அத்திருக்குறள் யாது?**

"அறிதோறு அறியாமை கண்டற்றால், காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு" (குறள் 1110)

இவ் அறிவியல் இலக்கணம் இன்பத்துப் பாலில் உள்ளது.

**141. சோறு வழங்கும் நாடு சோம்பேறிக் கூட்டத்தையும் பிச்சைக்காரர்களின் கூட்டத்தையும் வளர்க்கும் நாடாகும் ஆயிரம்பேருக்கு ஓர் ஊரில் சோறு போட்டான் என்றால் "ஆ" அவ்வளவு ஏழையா? உங்கள் ஊரில் இருக்கிறார்கள் என்று கேட்கத் தோன்றும். எங்கள் ஊரில் நூறு மருத்துவமனைகள் இருக்கின்றன என்று ஒருவர் கூறினால் நாம் என்ன நினைக்க வேண்டியிருக்கிறது நோயாளிகள் மலிந்த ஊர் என்பது பொருள். படை முதலிய தற்காப்புக்கள் மிக்க ஒரு நாடு பகையிருந்த நாடு என்றுதானே கருதப்பெறும் ஆகவேதான் வள்ளுவர் உள்ளம் பசி, பிணி, பகை ஒழிக்கும் நாட்டை நாடு என்று கருதாமல் உழைப்பால் பசி வென்று, உடல் நலத்தால் பிணி வென்று, அன்பால் பகை வென்ற மக்களைக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொண்ட நாடே நாடு என்றார். அக்குறள் எது?**

"உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேராது இயல்வது நாடு" (குறள் 734)

142. **குறளில் பரல்கள், அதிகாரங்கள், குறட்பாக்கள், அடிகள், சீரகள், சொற்கள், எழுத்துக்கள் எத்தனை?**

| | | |
|---|---|---|
| பரல்கள் | - | 03 |
| அதிகாரங்கள் | - | 133 |
| குறட்பாக்கள் | - | 1330 |
| அடிகள் | - | 2660 |
| சீர்கள் | - | 9310 |
| சொற்கள் | - | 12000 |
| எழுத்துக்கள் | - | 42194 |

143. **பட்டினி என்று சொல்லி வந்தவர்களின் பசியை ஆற்றுவது என்றுமே வீண் போகாது அதுவே தான்பெற்ற பொருளைப் பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்பச் சேமித்து வைக்கக்கூடிய கருவூலம் ஆகும் என்கிறார் வள்ளுவர். ஈகைப்பண்புக்குள்ள விலக்கத்தக்க சிறப்பைச் சுட்டும் குறள் எது?**

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (குறள் 226)

144. **வேடன் கலைத்து வந்த மான் குடிலுக்குள் புகுந்தது. மானைக் கலைத்து வந்த வேடன் மான் வந்ததா? எனக் கேட்கிறான் உயிர் தப்பி எம் குடிலுக்குள் புகுந்த மான் இருப்பதாக வேடனிடம் உண்மையைக் கூறியிருந்தால் அந்தப்புள்ளி மானின் உயிர் போயிருக்கும். எனவே நாம் கூறுவது பொய்யானது எனினும் அது ஒரு நன்மையைச் செய்யும் என்றால் அது வாய்மையாகவே கருதப்படும்.**

"பொய்மையும் வாய்மை இடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" (குறள் 292)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145. **அறிவுடைய ஒருவன் தனக்கு வரும் துன்பம் வெள்ளம்போல அளவு கடந்ததாக இருந்தாலும் அவன் அந்தத் துன்பத்தின் இயல்பை நினைத்து அந்தத் துன்பத்தின் வேதனையிலிருந்து விடுபடுவான்" என்பது வள்ளுவர் வாக்கு அக்குறள்**

" வெள்ளத்து அனைய இடும்பை அறிவுஉடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" (குறள் 622)

146. **இல் வாழ்க்கைக்குரிய மங்கலம் என்று எதைக் கூறுவர் அதற்கு நல்லணிகலம் என்றும் எதைக் கூறுவர் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

**மங்கலம் - மனைமாட்சி, நல்லணிகலம் - நன்மக்கட்பேறு**

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் 60)

147. **ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வமாக இருப்பது எது? கல்வி**

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை" (குறள் 400 )

148. **பின்வரும் அதிகாரப் பெயர்களுக்குரிய கருத்தைத் தருக?**

கல்வி - கற்பதற்குரிய நூல்களைக் கற்றல்
கேள்வி - தக்கவற்றை கேட்டறிதல்
அவாவறுதல் - ஆசையை நீக்குதல்
ஊழ் - இயற்கை ஒழுங்கு
மக்கட்பேறு - நன் மக்களைப் பெறுதல்
அறன் வலியுறுத்தல் - அறத்தின் தேவையை வலியுறுத்தல்
விருந்தோம்பல் - புதியவராக வந்தவரைப் பேணல்
செய்நன்றி அறிதல் - பிறர் செய்த நன்மையை மறவாமை
அடக்கம் உடைமை - மனம் மொழி மெய்களில் அடக்கம் உடையவராதல்
ஒப்புரவறிதல் - பொதுநலம் அறிதல்
தவம் - துன்பம் பொறுத்தலும் துன்பம் செய்யாமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**149. வேறு வேறு கொடி, சின்னம், ஆகியவற்றைக் கொண்டு இயங்கும் பல் குழுக்களும், நாட்டையே காட்டிக்கொடுக்கும் உட்பகையும் ஆளும் அரசை அமைதி குலையச் செய்யும் குறும்புத்தனங்களும் இல்லாமல் இருக்கும் நாடே நாடாகும் என்பதைச் சுட்டும் குறள் எது?**

"பல் குழுவும் பாழ்செய்யும் உட்பகையும், வேந்துஅலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு" (குறள் 735)

**150. "மாண்புடைய இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றுமில்லை மாணபற்றவளானால் உள்ளது. ஒன்றுமில்லை" என்று கூறுகிறார் வள்ளுவர். நற்குண நற்செய்கையுடைய பெண்மணி உள்ள வீட்டில் இல்லாத பொருள் எது? எல்லாம் இருப்பது போலவே தான் இல்லவள் மாண்பற்றவளானால் வீட்டில் சிறந்த பல பொருள்கள் நிறைந்திருந்தாலும் என்ன பயன் ஒன்றும் இல்லாதது போல்தான் இதைச் சுட்டும் குறள் எது?**

"இல்லதுஎன் இல்லவள் மாண்புஆனால் உள்ளது என்
இல்லவள் மாணாக் கடை?" (குறள் 53)

**151. இன்று அவர் குழல் வாசித்தார் எவ்வளவு இனிமையாக இருந்தது என்று ஒருவர் கூறுகிறார் மற்றும் ஒருவர் வந்து இவர் யாழ் வாசித்தார் வெகு இனிமையாக இருந்தது என்று கூறுகிறார். அவை இரண்டையும் கேட்டுவிட்டு ஒரு தந்தை சரி சரி நீங்கள் உங்கள் குழந்தைகளின் மழலை சொற்களே கேட்பதில்லைப் போலிருக்கிறது. என்னுடைய குழந்தைகளின் மழலை மொழிகளே எனக்கு யாழ் ஓசை குழல் ஓசையை விட இனிமை பயக்கிறதுஎன்கிறார். வாழ்க்கையில் குழந்தைகளின் மழலைச் சொற்கள் தாம் மிகவும் இனிமை பயப்பவை என்கிறார் வள்ளுவர். இந்தக் கருத்தை எடுத்துக் கூறும் குறள் எது?**

"குழல்இனிது, யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (குறள் 66)

**152. இருவரும் ஒருமுறை நேருக்கு நேர் பார்க்க நேர்ந்தது. அவனும் நோக்கினான் அவளும் நோக்கினாள். ஒத்த தன்மையான அந்தப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிலே ஒரு நிறைவு ஏற்பட்டது. அவன் மகிழ்ந்து எண்ணுகிறான் "கண்ணோடு கண்கள் பார்க்கும் பார்வை ஒன்று பட்டுவிட்டால் அதற்கு மேல் வாயால் சொல்ல வேண்டியது என்ன உள்ளது? வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை"
இவற்றைச் சுட்டும் குறள் எது?
"கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" (குறள் 1100)

153. மற்றவர்களிடம் அன்பு காட்ட வேண்டும் என்பதை விட மற்றவர்களுக்கு தீமை செய்யக் கூடாது என்று உணர்வது வேண்டும், நன்மை செய்தவர்களுக்கு தீமை செய்யக்கூடாது என்பதை விட தீமை செய்தவர்களுக்கும் தீமை செய்யக்கூடாது என்று உணர்வது சிறந்தது. தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று உணர்வது அதைவிடச் சிறந்தது என்று வள்ளுவர் கூறும் குறள் எது?
"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
என்ன பயத்ததோ, சால்பு" (குறள் 987)

154. பழந்தமிழில் கரைதல் என்றால் அழைத்தல். காக்கை ஒழித்து உண்ணாமல் தன் இனத்தை அழைத்துக் கலந்துண்ணும் அத்தன்மை வாய்ந்தவர்க்கே இவ்வுலகில் ஆக்கம் உண்டு. இத்தன்மையை எடுத்துக்காட்டும் குறள் எது?
"காக்கை கரவா கரைந்துஉண்ணும், ஆக்கமும்,
அன்ன நீரார்க்கே உள" (குறள்527 )

155. வள்ளுவர் நம்மைக் கேட்கிறார். இந்தக் குடிகாரன் குடிப்பான் அல்லவா? என்றைக்காவது ஒருநாள் குடிக்காமல் இருப்பானல்லவா?இருப்பான் அபபோது குடித்த ஒருவனைப் பார்க்கமாட்டானா? பார்ப்பான். ஏன்? பாதையில் அவன் கால் மாறி மாறி மாறுநடை போடுகிறது. அவன் வாயில் ஊறி நெஞ்சில் வழிகிற எச்சில் போகிற போக்கு ஏய் யார்ரா? அவன் என்னைப் பார்க்காமல் போர்ரவன் என்று அவன் பேசுகிற பேச்சு! வாய் குழறுதல்! இக்காட்சியைப் பார்க்கமாட்டானா? பார்ப்பான், பார்த்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடிக்கமாட்டானே என்று சொல்கிறார் வள்ளுவர். குடிக்கிற ஒருவன் குடியாதபோது குடித்தவனைப்பார்த்தால் நாமும் குடித்திருக்கிற போது இப்படித்தானே பிறரால் இகழப்படுவோம் என்று எண்ணுவானே! எண்ணியபின் குடிக்கமாட்டானே என்று நம்மை கேட்கிறார். இதைச் சுட்டும் குறள் எது?**

"கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு" (குறள்930)

156. **ஓராசிரியர் மாணாக்கனைப் பார்த்து திருக்குறளில் எல்லாம் இருக்கிறது என்றார்? துப்பாக்கி இருக்கிறதா என்றான் மாணவன் ஓ இருக்கிறதே என்றார் ஆசிரியர். எங்கே இருக்கிறது என்றான். துப்பாக்கிக் குறள்**

"துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத்
துப்புஆய தூஉம் மழை" (குறள்12)

என்பார் "ஓ" ஐந்து ஆறு துப்பாக்கி இருக்கிறதா?
சரிதான் சுட்டுப் பழகலாம் என்றான்.

157. **உலகத் தமிழ் மறைக் கழகத்தை நிறுவி திருக்குறள் மாநாட்டை நடத்திய முதறிஞர் க.பொ.இரத்தினம் அவர்களுக்கு பிற்பாடு திருக்குறள் மாநாட்டை நடத்தும் நிறுவனம் எது? அதன் நிறுவுனர் யார்?**

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம்
நிறுவுநர் வே.இறைபிள்ளை (பரமநாதபிள்ளை)

158. **உலக மக்கள் பலரிடம் காணப்படுகின்ற வீரத்திற்கும், தமிழகத்தில் காணப்படுகின்ற வீரத்திற்கும் வேறுபாடு உண்டு. தமிழகத்தின் வீரம் ஒரு தனிப்பண்பு வாய்ந்தது. இதனைத் "தமிழ் வீரம்" என்றும் "தமிழர் வீரம்" என்றும் கூறுவதுண்டு. திருக்குறளில் உள்ள ஒரு குறள் தன்னைக் கொல்ல வந்த யானையின் மீது கைவேலை எறிந்து போக்கிவிட்டுப் பகைவன் தன் மார்பின் எறிந்த வேலைப் பறித்து மகிழ்ந்தான் என குறிப்பிடும் குறள் எது?**

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (குறள் 774)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

159. நாட்டுக்கு என்று சில உடைமைகளும், வீட்டுக்கு என்று சில உடைமைகளும் உள்ளன போல வாழ்வுக்கு என்று சில உடைமைகளும் உள்ளன என்று வள்ளுவர் கருதுகிறார். அவர் அவைகளைத் துருவித் தேடிக் கண்டுபிடித்து எடுத்து முறைப்படுத்தி, வகைப்படுத்தி, தொகைப்படுத்தி நமக்கு தந்துள்ளார். அவை யாவை?

அன்புடைமை,அருளுடைமை,அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன.

160. ஒத்துணர்வோடு ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும்போது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதும் உதவி செய்வதும் இயல்பாக நடக்கும். இப்படி விட்டுக்கொடுப்பதையும் உதவி செய்வதையும் தான் ஒப்புரவு என்று சொல்கிறோம். ஒப்புரவு உலகளாவிய மனிதநேயத்தை உருவாக்க உதவும். மனிதநேயக் கடைப்பிடியிலிருந்து வழுவாமல் இயங்கினால் எத்துணை அமைப்புகள் இருந்தாலும் இசைந்து இயங்கலாம் என்றார் வள்ளுவர் இதைச் சுட்டும் குறள் எது?

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான், மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" (குறள் 214)

161. தமிழிலக்கியங்கள் குணத்தைப்பற்றியும் குடியைப்பற்றியும் பேசும் போதெல்லாம் நாம் தொழிலையும் சாதியையும் இவற்றோடு பின்னிப் பிணைத்துக் குழப்பாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். விளக்கமாக சொன்னால் தொழிலாலும் சாதியாலும் குமுகாயத்தில் மேல் தளத்தில் இருப்பவர்களிலும் கயவர்கள் உண்டுஎன்பதை நினைவுபடுத்தும் குறள் எது?

"மேல்இருந்தும், மேல்அல்லார் மேல்அல்லர், கீழ்இருந்தும்,
கீழ்அல்லார், கீழ்அல் லவர்" (குறள் 973)

162. வாழ்க்கைக்கு துணையாக வருபவள் எவ்வாறு இருக்கவேண்டும் என வள்ளுவர் கூறுகிறார்?

இல்வாழ்கைக்கு பொருள் இன்றியமையாதது; வேண்டற்பாலது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்யப்படின் வாழ்வில் இன்பத்தேன் பிலிற்றும், வருவாய்க்கு மேல் செலவு செய்யப்படின் வாழ்வைத் துன்பக்கைப்பு அரிக்கும். வருவாய்க்கேற்ப செலவு செய்யும் பொறுப்பு யாருடையது? அப்பொறுப்பு வீட்டுக்கரசியாய் வாழ்க்கைத் துணைநலனாக வந்த பெண்ணுடையது

"மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (குறள் 51)

163. **நாட்டிற்கும் மொழிக்கும் தனக்கும் பிறர்க்கும் நன்மையளிக்கும் செயல்கள் அனைத்தும் இன்பம் பயக்கும் செயல்கள். அச் செயல்கள் அனைத்தையும் செய். மேலும் அவற்றைச் செய்யும்போது பலரால் பலவிதமான துன்பங்கள் பல்வேறு வழிகளில் வந்து உன்னைத் துன்புறுத்தும். அப்பொழுது அத்துன்பங்கள் அனைத்தையும் கடந்து நின்று நற்செயல்களைச் செய்து முடிக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர் அதைக்குறிக்கும் குறள்?**

"துன்பம் உறவரினும் செய்க; துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை" (குறள் 669)

164. **இன்று சிலர் பழியையும் பாவத்தையும் உண்டாக்குகின்ற தீய செயல்களில் ஈடுபடுவதைக் காண்கின்றோம். எனவே இத்தீய** செயல்களில் எதையும் செய்துவிடாமல், இன்பத்தையும் புகழையும் தருகின்ற அறச்செயல் அனைத்தையும் செய்து மகிழ் என்கிறார் **வள்ளுவர் இதைச்சுட்டும் குறள் எது?**

"செயற்பாலது ஓரும் அறனே, ஒருவற்கு
உயற்பால ஓரும் பழி" (குறள் 40)

165. **ஒரு செயலைச் செய்து முடிக்கத் துணைபுரிவது அரசாங்கத்தின் உதவி அல்ல, நண்பர்களின் துணை அல்ல, உறவினர்களின் ஒத்துழைப்பு அல்ல, பணமும் அல்ல, வேண்டியது ஒன்றே ஒன்றுதான் அது மன உறுதியே என்று குறள் கூறி நம்மை ஊக்கப்படுத்துகிறது அக்குறள் எது?**

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்,
மற்றைய எல்லாம் பிற" (குறள் 661)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. உலக வாழ்க்கையைக் கெடுக்கவும் எடுக்கவும் ஆற்றல் பெற்றுள்ளவை மூன்று. சட்டம், பொதுமக்களின் போக்கு, சான்றோரின் மனச்சான்று. இம்மூன்றும் மூன்றுவகை வேலிகள். சட்டம், உளுத்தால் பொதுமக்கள் தாங்கலாம். பொதுமக்கள் ஏமாந்து கலங்கினால் சான்றோர் தாங்குவது திண்ணம். சான்றோரின் மனச்சான்றே உண்மையான வேலி. இதனால்தான் அவர்களைப் போற்றும்போது "பண்புடையவர்கள் இல்லையானால் உலகம் எப்போதோ மண்ணாய் மறைந்து அழிந்து போயிருக்கும்" என்றார் திருவள்ளுவர் இதைச்சுட்டும் குறள் எது?

"பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (குறள் 996)

167. உயிர் உடம்போடு ஒட்டி வாழ்கின்ற வாழ்க்கைக்கு முதல் காரணம் மழை. ஆனால் நல்ல அரசியல் இருந்தால்தான் எந்த உயிரும் உடம்பில் அமைதியாக வாழமுடியும் நல்ல அரசியலும் மிக மிகத் தேவையானதாக உள்ளது அரசியல் வாழ்க்கையில் கெடுக்கவல்ல செல்வாக்கு உள்ளது. கெட்டவர்களையும் கைதூக்கி எடுக்கவல்ல ஆற்றல் உள்ளது எது என்று எண்ணிப்பார்த்தால் செய்தித்தாள் என்று சொல்லலாம் ஆகவே உயிர் வாழ்க்கைக்கு மழை எப்படி அடிப்படையோ அப்படி அரசியல் வாழ்க்கைக்குச் செய்தி இதழ் (பத்திரிகை) உள்ளது எனலாம் இதை விளக்க வள்ளுவர் கூறிய குறள் எது?

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் **மழை**" (குறள் 15) **(செய்தி இதழ்)**

168. வீதி வீதி என்று பேசிவந்தால் ஒருவட்டத்திலேயே உலக உயிர் செல்ல வேண்டும் மேலேற முடியாது உழைப்பிற்கு யாரும் கூலி தராமல் இருக்க முடியாது. இலாபம் இல்லாமல் போகலாம். ஆனால்கூலி இல்லாமல் போகாது போகவிடவும் முடியாது. வீதியையும் புறமுதுகிட்டு ஓடச்செய்வான் சோர்வு இல்லாது முயற்சி செய்பவன். இவற்றைச் சுட்டும் குறள்கள் எவை?

"தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்" (குறள் 619)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்" (குறள் 620)

**169. வடமொழி இன்பநூலார் பிறன் மனைவியை நயப்பதை நியாயப்படுத்திஅவளை அடையும் சூழ்ச்சிகளையும் முறைகளையும் விரித்துக்கூறுகின்றனர். இது பரதாலிக (பிறன் மனையைப் பற்றியது) பதிரசியம் (பிறர்க்குரியது) எனப்படுகின்றது. அக்கீழ்மை நிலையை பிறன்மனை நோக்காப் பேராண்மை வேருடன் கவ்வி எறிகிறது பிறருடைய மனைவியை உள்ளத்தாலும் கருதாது பெரிய ஆண்தன்மை சார்புடையவர்க்கு அறன் மட்டுமா? மற்றவர்களுக்கும்? நிரம்பிய ஒழுக்கமாகும். வள்ளுவர் சிறப்பாகப் பேராண்மை என்ற சொல்லைப் பயன்படுத்திய குறள் எது?**

"பிறன்மனை நோக்காத பேர்ஆண்மை சான்றோர்க்கு
அரண் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு" (குறள் 148)

**170. ஆண் பெண் இருபாலார்க்கும் கற்பு வேண்டும் என்பார் வள்ளுவர். அவருடைய தலைவி கற்பென்னும் திண்மை கொண்டவள். ஆணிடத்தும் கற்பை எதிர்பார்ப்பவள். அவள் பிறர் நெஞ்சுபுகா மாண்பிணள். பிறர்கண் புகாக் கற்பைத் தன் கணவனும் பெற்றிருத்தல் வேண்டும் என எதிர்பார்ப்பவள் என பெண்ணின் கற்பை போற்றினார் வள்ளுவர் அந்தக் குறள் எது?**

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்" (குறள் 54)

**171. பொய் நஞ்சு இல்லை, நஞ்சினும் கொடியது. மனித நாகரீகம் தொடங்கிய காலம் தொட்டு பொய்மை மறுத்தே வந்துள்ளனர் உலகசிந்தனையாளர்கள். சில நாடுகளில் பொய்க்கு எதிரான சட்டமே இயற்றியிருக்கிறார்கள். துருக்கி நாட்டுச் சட்டத்தில் பொய் சொன்னதாக நிருபிக்கப்பட்டால் பொய் சொன்னவர்கள் நெற்றியில் நெருப்பில் பழுத்த இரும்புக் கம்பியால் சூடு போடுகிறார்களாம். நமது நாட்டில் சொல் வன்மையால் பொய்யை மெய்யாக்கிவீடுகிறார்கள். மனிதன் வளர வளர அவனது பொய்யும் வளருகிறது. பிறந்தவுடன் குழந்தைகள் பொய் பேசுவதில்லை,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவும் தெரியாது. ஆனால் அகவை வளர வளர வீடுகளும் வீதிகளும் குழந்தைகளுக்கும் பொய்யை கற்றுத்தந்து விடுகின்றன ஆனால் திருக்குறளில் வாய்மை என்ற அதிகாரமே உள்ளது. அதில் உள்ள குறள் எது.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" (குறள் 297)

172. ஒரு நிகழ்ச்சி தீமையாக இருக்குமானால் அத்தீமையினுடைய தோற்றங்கள் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொண்டு நலன்விளைவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தீமையை வெறுப்பது மட்டும் சீர்திருத்தம் அல்ல. தீமையினிடத்தில் அதற்கு மாறான ஒரு நன்மையை வைத்து தீமையை அகற்றுவதே சீர்திருத்தம். சிற்சில பொழுதில் சூழ்நிலையின் காரணமாகவும் நம்முடைய பழகிய அரிய நண்பர்களே தீமை செய்துவிடுவதும் உண்டு. இத்தீமையின் வழி நாம் ஆத்திரப்படுதல் முறையல்ல. முன்னும் பின்னும் உள்ள வாழ்க்கைப் போக்குகளை அன்பின் தரமான நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்க்க வேண்டும் என்கிறார் வள்ளுவர் அக்குறள்.

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்" (குறள் 109)

173. வாழ்க்கையில் ஏதாவது ஒரு துறையில் முன்நின்று தோன்றுவதனால் புகழோடு விளங்கவேண்டும். அதாவது அத்துறையில் முத்திரை பதித்து மற்றவர்கள் பாராட்டும் வகையில் செயலாற்ற வேண்டும். அத்தகைய நிலைமை இல்லாதவர்கள் அத்துறையில் ஈடுபட்டுத் தோற்பதை விட ஈடுபடாமல் அமைதியாக ஒதுங்கியிருப்பதே நல்லது புகழ் விளங்க வாழ முடியாதவர்கள் தம்மிடம் அதற்குரிய நல்ல பண்பும் நல்ல செயலும் இல்லையே என்று நொந்தும் கொள்வர்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள் 236)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**174. பண்டைக்காலத்தில் ஆரியர்களுக்கும், தமிழர்களுக்கும் அடிக்கடி சண்டை நேருவதற்கு காரணமாக இருந்தது யாகங்களே! உயீர்பலி கொடுத்து யாகம் செய்தல் ஆரியர்க்குரிய பழக்கம். அது தவறு என்பது தமிழர் வழக்கம். தமிழ் நாட்டில் தமிழர்கள் உயிர்ப்பலி கூடாது என்றே அன்று தொட்டு இன்று வரை வாதாடி வருகின்றனர். ஆகவே தமிழர் நாட்டில் ஆரியர் வந்து உயிர்ப்பலி கொடுப்பது தமிழரின் பழக்க வழக்கம், ஒழுக்கம், நெறி, மொழி நாடு இவற்றிற்கு கேடு சூழச்செய்யும் செய்கை என்று கருதினார்கள். வள்ளுவர் சிறந்த தமிழ்மகன். ஆதலின் அவர் உள்ளம் யாகத்தை வெறுத்தது. அவி சொரிந்து நீ ஆயிரம் யாகம் செய்வதைவிட ஒரு உயிரைக் கொலை செய்யாமல் இருப்பது நல்லது எனக் கூறினார் வள்ளுவர். இதைச் சுட்டும் குறள்.**

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" (குறள் 259)

**175. நல்ல நாட்டிற்குரிய தகுதி எவை என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

1.தொடர்ந்து பயிர்விளைச்சல், தகுந்த சான்றோர், வளம் குன்றாச் செல்வர். (731)

2.உறுபசியும் ஒவாப்பிணியும் செறுபகையும் இல்லாதது. (734)

3.பலகட்சி (பல நிறுவனம்) உட்பகை, வன்முறைக்கும்பல் இல்லாதது.

4.பிணி இன்மை, செல்வம், விளைச்சல், இன்பம், பாதுகாப்பு என்ற ஐந்தும் இருத்தல். (738)

5.வளங்கள் இருப்பினும் தக்க ஆளுவோர் இல்லாமை. (நாடு (அ) நிறுவனம்) (740)

**176. மருத்துவரின் தகுதிகள் எவை என வள்ளுவர் சுட்டுகிறார்.**

1. நோயைக் கண்டறிதல்
2. நோய்க்கான காரணம் கண்டறிதல்
3. பிறகு அந்த நோயை நீக்கும் வழிமுறைகளைக் கண்டறிதல்

"நோய்நாடி, நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் 948)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**177. நெஞ்சில் வேல்பாய்ந்து கொல்லும் அம்பு வடிவத்தில் கூராகவும் நேராகவும் உள்ளது. தோற்றத்தால் அழகுடையது. ஆனால் செயலால் கொடுமை உடையது. யாழ் தோற்றத்தில் வளைந்தும் நெளிந்தும் உள்ளது. அதிலிருந்து புறப்படும் இசையோ அனைவருக்கும் இனிமை தருவது. தோற்றத்தால் சீராகத் தோன்றுபவரெல்லாம் நல்லவரும் அல்லர். அழகு குறைந்து தோன்றுபவர் எல்லாம் கெட்டவருமல்லர். அவரவர் செயல்தான் தீர்மானிக்க வேண்டும் என்பது வள்ளுவம். அக்குறள் எது?**

"கணைகொடிது, யாழ்கோடு செவ்விது ஆங்குஅன்ன
வினைபடு பாலால் கொளல்" (குறள் 279)

**178. "மாணவர்களுக்கு திருக்குறை நன்றாகக் கற்றுக் கொடுங்கள் எனது வாழ்வின் உயர்வுக்கு திருக்குறளே காரணம்" எனக் கூறிய மேனாள் இந்தியக் குடியரசுத் தலைவர் யார்?**

தமிழ்நாட்டைச்சேர்ந்த அப்துல்கலாம்

**179. இல்வாழ்க்கையின் கடமைகள் என எவற்றை வள்ளுவர் குறிப்பிடகின்றார்?**

1. நெருக்கமுடையோராக உள்ள தன் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் ஆகிய மூவரும் நல்வழியல் செல்ல துணை நிற்றல். (குறள் 41)
2. இல்லறம் செல்லாது துறவறம் சென்ற துறவிகள் பசியால் வாழும் ஏழைகள், ஆரவாளர்களை இழந்த அனாதைகள் ஆகியோருக்கு துணை நிற்றல் (குறள் 42)
3. அரிய பெரிய வாழ்வு வாழ்நத மறைந்தோர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர். இல்லத்திற்குப் புதிதாக வரும் விருந்தினர், உறவினர், தன்குடும்பத்தார் ஆகிய ஐவகையினரையும் உரிய முறையில் பேணிப்பாதுகாத்தல் (43)

**180. தன்னைக் காத்த தலைவனுடைய கண்களில் நீர் பெருகுமாறு ஒர வீரன் களத்தில் மயடி நேருமானால் அத்தகு இறப்பைக் கெஞ்சிப் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை உணர்த்தும் குறள்?**

"புரந்தார்கண் நீரமல்கச் சாகிற்பின், சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து" (குறள் 220)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் கேள்வியும் விடையும்

**01. நண்பர்களாய் இருப்பவர்களுள் நல்லவர் யார். கெட்டவர் யார் என்பதைத் தெரிந்து கொள்வது எப்படி?**

பகைத்துப்பார், உடனே தெரிந்துவிடும்.

**02. வாழ்க்கையில் வெற்றி அடைவது எப்படி?**

உள்ளத்திலே உண்மை, வாக்கிலே தெளிவு, தொழிலிலேதிறமை, தொண்டிலே நேர்மை, துன்பத்திலே சகிப்பு இவை ஐந்தும் அடைவதே வாழ்க்கையில் வெற்றி அடையுழ் வழி.

**03. மாணவர்கள் அரசியலில் தலையிடலாமா?**

"தலையிடலாம்" என்பது சிலரது கருத்து. "கூடாது" என்பது சிலரது கருத்து என் கருத்து யாதெனில் மாணவர் அரசியலைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். பலவித கலைகளையும் படித்து அறிவதைப்போல,அரசியற் கலையையும் படித்தும் கேட்டும் அறிந்து தீர வேண்டும். ஆனால் அரசியல் இயக்கங்களில் படிப்பு முடியும் வரை தலையிடுதல் கூடாது. தலையிட்டால் அவர்கள் படிப்பும் பாழாகி, செலவிடும் பணமும் பாழாகி, கல்லூரியும் பாழாகி, அவர்களும் பாழாகி, அவர்களின் பெற்றோரும் பாழாகி , நாடும் பாழாக நேரிடும்.

**04. பேசுவது போல எழுதும் இலக்கியம் நல்லதல்லவா!**

யார் பேசுவது போல? என்ற ஒரு கேள்விக்கு நீங்கள் விடையளித்தால் "நல்லதன்று" என்று விடைதானே கிடைத்துவிடும். வாழைப்பழம் என்பதைத் தெற்கே உள்ள சிலர் "வாளப்பழம்" என்கின்றனர். கிழக்கே உள்ள சிலர் "மார்கழித் திருவிழா" என்பதை "மார்கசித் திருவிசா" என்கின்றனர். தாழ்தப்பட்டோருட் சிலர் "இஸ்துகினு" "போயிகினு" என்று சொல்கின்றனர். உயர்த்தப்பட்டோருட் சிலர். "அத்திம்பேர்" "அம்மாமி " என்கின்றனர் இவற்றுள் யார் பேசுவது போல எழுதுவது? இப்படி எழுதுகிற இலக்கியம் எப்படி நல்லதாக இருக்கும்?

**05. கோபமுள்ள மனைவியைச் சமாதானப்படுத்துவது எப்படி?**

அடக்கிப்பார்ப்பது அல்லது அடங்கிப்போவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. தமிழ்மொழி உலகத்திலுள்ள மற்றெல்லா மொழிகளையும் விடத் தலை சிறந்ததென்று சொல்லப்படுகிறது. அதன் எந்த அமிசம் ஆங்கிலம் முதலான ஏனைய மொழிகளை விட சிறந்தது?**

இந்த வினாவுக்கு விடைகூறப் பலமணி நேரம் வேண்டும்.ஆயினும் சுருக்கமாக சொல்கிறேன்

1. இனியமொழி, எளியமொழி,சிறந்தமொழி, பழையமொழி, தனித்தமொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ் ஒன்றுதான் தகுதியானது.
2. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் பெற்றது இம்மொழி
3. கண்ணால் காணப்படாத மனத்தான் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கும் இலக்கணம் கூறுகின்ற அகப் பொருள் இலக்கணத்தைக்கொண்டது.
4. பிறமொழிகளில் காணப்படாத “ழ” என்று ஒலிக்கும் எழுத்தைக் கொணடது.
5. ஒழுக்கத்தை மட்டும் வற்புறுத்திக்கூறும் தனி நூல்கள் பலவற்றைக் கொண்டது

ஆகிய இவை ஐந்தும் தமிழ்மொழிக்குள்ள தனிச்சிறப்புகளாகும்.

**07. இலக்கியத்தை ஒரு பொழுதுபோக்கு என்று சொல்லுகிறார்கள். உங்கள் கருத்து யாது? கலை கலைக்காகவா? அல்லது மக்களுக்காகவா?**

கலை, இலக்கியம் என்பவை பற்றி எப்பொழுதும் இரண்டு கருத்துக்கள் இருத்தல் கூடாது. ஒன்றுதான் இருக்க இயலும். உண்மையும் அதுதான் கலை கலைக்காக என்று சொல்லுவது மரத்திற்காக மரம், விதைக்காக விதை, பூவிற்காகப் பூ, என்பது போலிருக்கிறது. பூ, என்பது மக்களுக்காக பூ என்பது மணத்திற்காக என்றுதான் இருக்க இயலும் அது போல, கலை வாழ்வதற்காகப் பிறந்தது. இது பற்றி அறிஞர் உலகத்தில் கருத்து வேற்றுமை இருக்க இயலாது. வாழ்கைக்காக கலை இருந்தால்தான் அது கலையாகும். மாறுபட்ட கருத்தோடு சொன்னால் அது மாறுபட்ட கருத்துள்ளவர்களின் கருத்து என்றுதான் சொல்லவேண்டும். தமிழைப் பொறுத்தவரை இலக்கியம் வாழ்வின் உயிர்நாடியாகத் தான் இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. சட்டங்களால் மனிதனை ஒழுக்கமும் தூய்மையும் உடையவனாக செய்யமுடியுமா?**

ஒழுக்கத்துக்கும் தூய்மைக்கும் கல்வியும் கேள்வியும் அறிவுமே துணை செய்யும். என்றாலும் சட்டங்களால் திருத்த வேண்டிய மனிதர்களும் நம்நாட்டில் இல்லாமல் இல்லை.

**09. "அழிப்பவன் ஆண்", ஆக்குபவள் பெண் என்பது எந்த அளவு உண்மை?**

எல்லாவற்றிலும் அழிப்பவன் ஆண் அல்லன், எல்லாவற்றிலும் ஆக்குபவள் பெண்ணும் அல்லள். ஒரு குடும்பத்தைச் சிறப்பாக நடத்துவதில் ஆணை விடப் பெண் சிறந்தவள்.

**10. கம்பர், இளங்கோ, வள்ளுவர் இம் மூவரைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

கம்பர் தமிழ் மொழிக்குக் கலைக்கோயில் கட்டியவர். இளங்கோ தமிழகத்துக்கு ஒரு கலைக்கோயில் கட்டியவர். வள்ளுவர் தமிழ் மக்களின் மாண்புக்கு ஒரு கலைக்கோயில் கட்டியவர். கம்பராமாயணத்தை விடத் தமிழ்ச்சுவையுடையதும், சிலப்பதிகாரத்தை விடத் தமிழகத்தைப் படம்பிடித்துக்காட்டுவதும் திருக்குறளைப் போன்று தமிழன் பண்பை விளக்குவதுமான இலக்கியம் வேறில்லை பொதுவாக இம்மூவரும் தமிழ் மக்களாற் போற்றப்பட வேண்டுபவர்களே. ஆயினும், ஒழுக்கத்தை வலியுறுத்தி உலகிற்கு மறைதந்துதவிய வள்ளுவரைத் தமிழ்மக்களேயன்றி, உலக மாந்தர் அனைவருமே அதிகம் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

**11. சுயநலம் குற்றமா, குணமா?**

பிறர் நலமே தன்னலத்திலிருந்து தோன்றுவதுதான். தன்னலம் ஒரு போதும் குற்றமாகாது. ஆனால் அது பிறரைப்பாதிக்காமலிருக்க வேண்டும் பிறரைப்பாதித்து வஞ்சித்து அடைகின்ற தன்னலந்தான் நஞ்சு கலந்ததாகும்.

**12. குழந்தைகளை அடித்து வளர்ப்பது நல்லதா அடிக்காமல் வளர்ப்பது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லதா?**

மிரட்டி வளர்ப்பது நல்லது. எல்லாவற்றையும் விட அதிகம் நல்லது அதை "நல்ல பிள்ளை" "நல்லபிள்ளை" எனச்சொல்லி தவறு செய்தால் கெட்ட பிள்ளை எனச் சொல்லி விடுவார்கள் எனப்பயமுறுத்தி வளர்ப்பது. குழந்தைகள் செய்யும் சிறிய குற்றங்களைப் பெரியனவாகக் குழந்தைகளிடம் காட்டவேண்டும். அதுவே அறிவுக்கு உணவு. தவறு என்று உணர்ந்த பெரிய குற்றங்களை குழந்தையை அணைத்துக்கொண்டு "இனி அப்படி செய்யாதே" எனச் சொல்லி விட்டுவிடவேண்டும். இந்த முறை பிள்ளைகளின் அறிவை ஆற்றலை வளர்ப்பதற்குப் பெருந்துணை புரியும்.

**13. பழங்காலத்தில் மதம் இருந்ததா?**

பழந்தமிழகத்தில் மதம் இருந்ததாகத் தெரியவில்லை. அடுத்த காலத்தில் சமயம் இருந்திருக்கிறது. தொல்காப்பியர் காலத்தில் கடவுள் வணக்கம் இருந்திருக்கிறது. சங்ககாலத்தில் முருகர் வழிபாடு தோன்றியிருக்கிறது. இவற்றிற்கு சங்க நூல்களே சான்றாகும்.

**14. உண்மை என்பதன் பொருள் என்ன?**

தமிழ் மொழியில் உண்மை என்பதற்கு மூன்று சொற்கள் காணப்படுகின்றன. அவை உண்மை, வாய்மை, மெய்ம்மை எனப்படும். உள்+மை - உண்மை, உள்ளத்தின் தன்மை; வாய்+மை- வாய்மை; வாயின் தன்மை, மெய்+மை-மெய்மை; உடம்பின் தன்மை என்றாகும். இதன் கருத்து தீமையை மனத்தாலும் எண்ணாதே; தீமையை வாயாலும் சொல்லாதே ; தீமையை உடலாலும் செய்யாதே என்பதாகும். இத்தகைய பொருள் நிறைந்த சொற்களைத் தமிழில் அன்றிப் பிறமொழிகளிற் காண இயலாது.

**15. வேட்டி வடசொல்லா, தமிழ்ச் சொல்லா?**

வேட்டி, நல்ல தமிழ்ச் சொல். ஆடைகளை நீளமாக நெய்து ஒவ்வொன்றாக அறுத்தெடுப்பார்கள். அறுக்கப்பட்டது அறுவை. துணிக்கப்பட்டது துணி. துண்டிக்கப்பட்டது துண்டு. வெட்டப்பட்டது வெட்டி, காலப்போக்கில் வெட்டி, வேட்டி என்றாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. எண்ணம் பிறக்குமிடம் எது? மனம் வேறு. மனச்சாட்சி வேறா?**

எண்ணுவதே மனந்தான். அதை நல்லது கெட்டது என அறிவுறுத்துவது எதுவோ, அது அறிவு; தீமை நன்மை என அறிவுறுத்துவது அறிவு. அதை மீறிச் செல்வது மனம். அறிவு சாட்சியாக நிற்பதற்கு மனச்சாட்சி என்பது பெயர்.

**17. தாலிக்கயிற்றின் தத்துவமென்ன?**

பழங்காலத் தமிழன் தன் வீரத்திற்கு அறிகுறியாகப் புலிப் பல்லைக் கொண்டு வந்து தன் அன்புக்குரியவளிடம் கொடுத்து, கழுத்தில் அணியச் செய்து மகிழ்ந்து வந்தான், பின்னர் பொன் தாலியாயிற்று. 'புலிப்பல்தாலி' என்று சொல்வது இதனை மெய்ப்பிக்கும். பிறதாலிகளுக்கு என்ன சொல்வது என்பது விளங்கவில்லை.

**18. வாய்ப்புள்ளவன் வாழ்கிறான்; வாய்பில்லாதவன் வதைபடுகிறான் இந்நிலை மாறுவது எப்போது?**

நல்லவன் தீமையை அனுபவித்தாலும், தீயவன் நல்லதை அனுபவித்தாலும், அவை நெடுங்காலம் நில்லா. எவனும் வாய்ப்பின்றி வாழ இயலாது; அவ்வாய்ப்பை முயற்சியின்றிப் பெற இயலாது.

**19. ஏமாற்றுதலும் ஏமாறுதலும் எப்படி உண்டாகின்றன?**

ஏமாற்றுதல் பிழைக்கப் பிழைப்பற்று, வாழ வகையற்ற மக்களால் நடத்தப்படுவது. ஏமாறுதல், ஆராயாமல் அன்பும் இரக்கமும் காட்டுவதால் ஏற்படுவது.

**20. அழிப்பவன் ஆண்? ஆக்குபவள் பெண், என்பது எந்த அளவு உண்மை?**

எல்லாவற்றிலும் அழிப்பவன் ஆண் அல்லன்; எல்லாவற்றிலும் ஆக்குபவள் பெண்ணும் அல்லள். ஒரு குடும்பத்தைச் சிறப்பாக நடத்துவதில் ஆணை விடப் பெண் சிறந்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளே
# நம்
# ஊன்று கோல்
# தூண்டு கோல்

உலக மேதைகளில் திருவள்ளுவர் எவரெச்ட். அறிவுப் போராளி. இன்னும் அவர் ஒளிந்து கொண்டிருக்கிறார்.இனியும் ஒளிருவார். ஒளியைக் கொண்டு நம்மைச் சூழ்ந்துள்ள இருட்டை அகற்றிக் கொள்ள வேண்டியது நம்கடமை.

அவருடைய திருக்குறள் கருத்துகள், சாதி, மத, இன, மொழி எல்லை கடந்தவை. எங்கும் எதிலும் சமத்துவம் தான் திருக்குறளின் உயிர்மூச்சு. அப்பெரும் நூல், அரும் பெருந்துறவு மேற்கொண்ட இத்தாலிய நாட்டு வீரமாமுனிவரையே ஈர்த்து, எம்மனோரை ஈர்த்தும், ஈர்ப்பதும் வியப்புகள் அல்ல. இத்துணை அரும்பெரும். பொற்கருவூலம் தமிழர்க்கு 2045 ஆண்டுகளுக்கு முன்னே வாரி வழங்கப் பெற்றும், அதனைத் தமது வாழ்க்கை நடைமுறையாக்கிக் கொள்ளாத தமிழர் நிலையே வியப்புக்குரியது, அவலம். அந்நிலை போக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. அவற்றுள் திருக்குறள் பரவுதல், பரப்புதல் தலைமையானவை.

**முனைவர் சு.ப.அறவாணன்**
**மேனாள் துணை வேந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுப் பால்

திருவள்ளுவர் வீட்டைப் பற்றி தனிபால் ஏன் அருளவில்லை? இவ்வினா இன்று எழுந்தது அன்று. நேற்று எழுந்தது அன்று; பலப்பல ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்தது. இதற்குப் பலவகை விடைகளும் அவ்வப்போது பிறந்தே வந்தன. வினாவும் விடையும் பழம் பாடமாமாயின.

அறம்,பொருள் (புறம்), இன்பம்(அகம்) என்று கூறுவது பழந்தமிழர் மரபு. இதற்கு அவர் தம் நூல்கள் இன்றும் சான்றாக நிற்கின்றன. திருவள்ளுவர் அம்மரபையொட்டி வீட்டுப்பாலை விடுத்திருக்கலாம்.

வீடு ஓர் உலகு அன்று, அஃது எல்லையுற்றது; வாக்குமனம் கடந்தது. அதை எப்படி நினைப்பது? சொல்வது? அறம், பொருள், இன்ப வழி நின்று ஒழுகினால் விளைவு வீடாகும். வீடு விளைவு; ஓர் இடமன்று.

திருவள்ளுவர் மாசற்ற நிலையை அறம் என்கிறார். அவ்வறத்தின் முழுநிலையே வீடாகும். பாயிரத்தில் திருவள்ளுவர் இறைவனை 'வாலறிவன்' என்றும், 'வேண்டுதல் வேண்டாமையினான் என்றும், 'அறவாழி அந்தணன்' என்றும் போற்றியுள்ளார். அச்செம்மொழிகள் 'அறமே இறை' என்பதை உட்கொண்டவை.

வீட்டைப் பற்றிய தனிநூல்கள் பின்னாளில் தோன்றின. அன்று தொட்டு மக்கள் மனம் பெரிதும் அறம் பொருள் இன்பத்தில் படியாது வெறும் வீட்டிலே படியலாயிற்று. அவர் தம் நெஞ்சில் வீடு ஓர் உலகாயிற்று. அதனால் அறம், பொருள் இன்ப ஒழுக்கத்தின் விளைவு விடு என்ற உணர்வு சுருங்கியது; அன்பொழுக்கம் குன்றியது; அவர் ஆட்சி பெற்றது; போர்கள் பெருகின.

**தமிழ்த் தென்றல் வி.கல்யாணசுந்தரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது அறிவு?

" அறிவு" என்பது எது? எது அறிவு? என்னென்னவோ எவராலோ ஆராயப் பெற்று வருகிற இக்காலத்தில், நாம் இதையாவது இப்போதாவது ஆராய வேண்டாமா? ஆராய்வோம். இன்றேல், " நாம் அறிவைப் பெற்றிருக்கிறோம்? என்று எவ்வாறு கூறுவது?

அறிவு கண்களாற் காணக்கூடிய ஒரு பொருளன்று; என்றாலும், மக்களின் செயல்களைக் கொண்டு அதை ஆராய்ந்து அறிய வேண்டியிருக்கிறது. அறிவுடையவர்கள் நல்லவர்கள் என்றும், அறிவற்றவர்கள் பொல்லாதவர்கள் என்றும் சொல்லப் பெற்று வருகிறது.

இஃது உண்மையாகுமானால். எதை அறிவு என்று கூறுவது என்பது விளங்கவில்லை. இதனை ஆராயும் பொழுது நமக்குப் பல ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

அறிவைக் காண வேண்டுமானால், உண்டு, உறங்கி ஒய்ந்து கிடக்கும் நல்ல பிள்ளைகளிடஞ் சென்று பயனில்லை; ஒயாத சேட்டை செய்து, விரைவாகத் துன்பத்தை விளைவிக்கும் பொல்லாத பிள்ளைகளிடத்துத்தான் அதைக் காணமுடிகிறது.

பணத்தை முடிந்து தோளிற் போட்டுக் கொண்டு நடந்து செல்லும் நல்ல மனிதர்களை விட, அதனை அவிழ்த்து எடுக்கின்ற முடிச்சவிழ்க்கிகள் அறிவை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

உயர்ந்த பொருளை வைத்து, உள்ள விலை கூறி விற்கின்ற நல்ல வியாபாரிகளை விட, மட்ட பொருளை அதிக விலைக்கு விற்றுப் பொய்கூறிப் பொருள் தேடும் பொல்லாத வியாபாரிகள் அதிக அறிவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

நேர்மையாகத் தொழில் செய்கிற உத்தியோகத்தர்களை விட, இலஞ்சம் வாங்கித் தொழில் செய்யும் உத்தியோகத்தர்களுக்கு மிக்க அறிவு வேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலை வருத்தி, உழைத்துழைத்து உண்ணுக்கின்ற கிராம மக்களை விட, உழைக்காது உண்டு வாழ்கின்ற நகர மக்கள் மிகவும் அறிவுடையார்களாகத் தோன்றுகிறார்கள்.

பொதுநலங் கருதித் தொண்டு செய்து, வருகின்ற உண்மையான உழைப்பாளிகளை விட, தந்நலங் கருதி பொதுத் தொண்டு செய்வதாக நடிக்கின்ற தீய மக்களிடத்து அதிக அறிவு காணப்படுகின்றது.

நெறி தவறாது வாழ்க்கை நடத்தி வரும் பெண்களை விட, நெறி தவறி வாழ்வை நடத்தும் பெண்கள் மிக அறிவுடையவர்களாகத் தோன்றுகிறார்கள்.

முடிவாகக் கூறுமிடத்து, "யோக்கியவர்களை விட அயோக்கியவர்களே மிக்க அறிவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்" எனக் கூறலாம். "நல்ல மனிதன்" என்றால், "பாவம் ஒன்றும் தெரியாவதன்" என்றும் "பொல்லாதவன்" என்றும் "பொல்லாத மனிதன்" என்றால், எவராலும் ஏமாற்ற முடியாதவன் என்றும் பொதுவாக நம்மிடையே வழங்கி வருகிற ஒரு வழக்கும் இதனை மெய்ப்பிக்கும்.

அவ்விதமாயின், "எது அறிவு? எவரிடத்தும் காண்பது அறிவு? பொல்லாத மக்களிடத்திலிருந்து தான் அறிவு ஒளி வீசுமா? நல்ல மக்களிடத்திலிருந்து அஃது ஒளி வீசாதா? என்ற கேள்விகள் நம்மிடையே எழும்.

இக்கேள்விகளைப் பலரிடத்தும் கேளுங்கள். வருகின்ற விடை உங்கள் அறிவுப் பசிக்கும் ஏற்ற உணவாக இருக்கிறதா? என்று சுவைத்துப் பாருங்கள். பிறகு, இதே கேள்வியைத் திருவள்ளுவரிடம் போய்க் கேளுங்கள், ஏனெனில், இவர் தாம் "எது அறிவு?" என்பதைக் காட்ட கூடியவர். அவர் ஒருவரே "அறிவு ஏது?என்பதைக் காட்டியிருக்கிறார். அது எது?

மண்ணை, பெண்ணை, பொன்னை, பொருளைக் கண்டால் மனம் அவற்றையடையத் தாவுமாம். தவறான வழியிலும் அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுமாம். மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்த, தீய எண்ணங்கள் தீய செயல்களிடத்திலிருந்து விலக்கிக் காப்பாற்றி, நல்ல எண்ணங்கள், நல்ல செயல்களிடத்து அதைச் செலுத்துவது எதுவோ, அதுவே அறிவு என்று வள்ளுவர் கூறுகிறார்.

இக்கருத்துக்கள் அடங்கிய வள்ளுவருடைய சொற்களை அவருடைய வாக்கினாலேயே கேளுங்கள்.

சென்ற இடத்தால் செலவிடா, தீதுஒரீஇ,
நன்றின்பால் உய்ப்பது தறிவு
என்பதே அவரது வாக்கு.

"மனம் சென்றவிடமெல்லாம் அதனைச் செல்ல விடாது தடுத்து, அதைத் தீமைகளிலிருந்து விலக்கி, நல்லவைகளிடத்துச் செலுத்துவது எதுவோ, அதுவே அறிவு" என்பத இதன் பொருள்.

"மனமே அறிவு" என மயங்கியிருப்பதனாலும், மனத்தின் செயல்களனைத்தும் அறிவின் செயல்களெனக் கருதியிருப்பனாலுமே, மேலே கண்ட ஐயப்பாடுகள் நமக்குத் தோன்றின.

மனம் வேறு அறிவு வேறு என்றும், மனத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றே அறிவு என்றும், மனத்தை அடக்கி ஆள்வதே அறிவு என்றும் திருவள்ளுவர் வகுத்துக் காட்டுவதிலிருந்து நம் ஐயப்பாடுகள் அனைத்தும் அழிந்து ஒழிகின்றன.

மனம் செல்லும் வழிகளைத் "தவறு" என எடுத்துக் காட்டித் திருத்தி நல்ல வழி செல்ல அறிவு அறிவுறுத்தினாலும், அதனையும் மீறிச் செயலாற்றும் வலிமை மனத்திற்கு உண்டு என்பதை வள்ளுவர், "நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்ற சொற்களால் கூறாமற் கூறுகிறார்.

திருடனுடைய மனம் திருட எண்ணுகிறது. திருடத் துணிகிறான்; பிறகு திருடுகிறான். திருடும் போது அஞ்சி நடுங்குகிறான், ஏன்? அது தவறு என்று அவனுடைய மனதுக்கு அறிவுறுத்துகிறது. அறிவு உணர்த்தியும், தான் உணர்ந்தும், அறிவின் வழிச் செல்லாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையால் தூண்டப்பட்ட மனதின் வழிச் சென்று திருடி விடுகிறான். அறிவையும் மீறி மனம் செயலூற்றும் முறையை விளக்க இஃது ஒன்றே போதுமானதாகும்.

திருடுவது, பொய் சொல்லுவது, இலஞ்சம் வாங்குவது ஏமாற்றுவது, நெறி தவறுவது ஆகியவை எவ்வளவு திறமையாகச் செய்யப்பட்டாலும்; அது அறிவின் செயல் அன்று, ஆசையின் வயப்பட்ட மனதின் செயல் என்றும், அதன் தவறுகளை உணர்த்தி நல்ல வழியில் செல்லத் தூண்டும் செயலே அறிவின் செயல் என்றும், திருவள்ளுவரின் திருக்குறள் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

கண்டவிட மெல்லாம் கருத்தைச் செலுத்தி ஓடி அலையும் மக்களுக்கு உண்மையை உணர்த்தி, நல்வழி நடத்தும் பெற்றோர்கள் அறிவின் உரு ஆவார்கள். துள்ளித் திரியும் இளங் காளைகளை அடக்கி உழவுக்குப் பயன்படுத்தி வரும் உழவன் அறிவுருவாளன். திமிர் பிடித்த குதிரைகளை அடக்கி வண்டியிற் பூட்டி ஒழுங்காகச் செல்லும்படி நடத்துகின்ற வண்டிக்காரனும் அறிவின் உருமதங் கொண்ட யானையை அடக்கித் தீமை செய்வதினின்றும் விலக்கி நேரான வழியில் நடத்துகின்ற பாகனும் அறிவுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவன் என்றும் இக்குறளால் அறிய முடிகிறது.

இதிலிருந்து அறிவின் வழிச் செல்லும் மக்கள் அறிவைப் பெற்றவர்கள் என்றும், மனதின் வழிச் செல்லும் மக்கள் அறிவை இழந்தவர்கள் என்றும் நன்கறிகிறோம்.

ஆகவே, தம்பிகளே, தங்கைகளே, உங்களுடைய ஐயப்பாடு என்னாயிற்று? வள்ளுவர் கூறுகிற விடை எப்படி இருக்கிறது? எது அறிவு? என்பது இப்போது விளங்குகிறதா? வள்ளுவர் காட்டும் அறிவு உங்கள் அறிவுக்கு பொருத்தமாக இருக்கிறதா?

எடுங்கள் திருக்குறளை, படியுங்கள், நன்றாக, மனம் செல்லும் வழியெல்லாம் செல்லாமல், அறிவு செலுத்தும் வழியில் செல்லுங்கள். செய்வன செய்து சிறப்பெய்தி வாழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் சாதனைகள்

- தமிழ் நெறியில் திருமணம்
  (40க்கு மேற்பட்ட திருமணங்கள் நிகழ்தப் பெற்றுள்ளன.
- தமிழ் நெறியில் பிறந்த நாள் விழா
- தமிழ் நெறியில் புதுமனை (அ) பணிமனை திறப்பு விழா
- தமிழ் நெறியில் பெயர் சூட்டு விழா
- தமிழ் நெறியில் பூப்பு நீராட்டு விழா
- தமிழ் நெறியில் நினைவுக் கரணம் (அ) படத்திறப்பு
  (31ஆம் நாள் அந்தியேட்டி)
- திருக்குறள் மாநாடு
  (கருத்தரங்கும், திருவள்ளுவர் விழாவும், மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு)
- தமிழ்ச் சான்றோர்களின் நினைவுச் சொற்பொழிவு
- ஆண்டு 02 தொடக்கம் ஆண்டு 13 வரையான மாணவர்களுக்கான திருக்குறள் தமிழ் இலக்கியத் தேர்வு, நாவன்மை கலைத்திறன் போட்டிகள்.
- முழுநிலா அறிவோர் ஒன்று கூடல்
- திணைக்களங்களுக்கிடையில் தமிழ் மொழி நடைமுறைப்படுத்தல் போட்டி
- இலக்கியக் காட்சிகள் தமிழ்ச் சான்றோர் நாள் காட்டி, கோட்ட நிலையில் ஔவையார் விழா, சிலப்பதிகார விழா, சான்றோர் விழா

சிவா பதிப்பகம், 05, கனகபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org